Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JANUARY 5, 2021

புதன்கிழமை ஜனவரி 05, 2022 | ஒளி: 07 கதிர்: 197 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE



## ஏ.சி காஸ் வெடித்ததில் கண்டி இளைஞன் பலி

கண்டி, கெட்டம்பே, இரண்டாவது ராஜசிங்ஹ மாவத்தையிலுள்ள முன்னணி சுற்றுலா ஹோட்டலில், குளிரூட்டியின் காஸ் வெடித்ததில் இளைஞன் பலியாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று (04) பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது என்று கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி, சுதுஹம்பொல பிரதேசத்தில் வசிக்கும் 21 வயதான, குளிரூட்டி பழுதுபார்க்கும் பணியில் ஈடுபடும், தொழில்நுட்பவியலாளரே இறந்துள்ளார் எனத் தெரிவித்த கண்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## 'பெயில்' தூக்கியது

### அமைச்சிலிருந்து ஓட்டோவில் புறப்பட்டுச் சென்றார்



அண்மையில் சந்தைக்குச் சென்றிருந்தேன்; பொருட்களின் விலைகள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேட்டிருந்தனர், 'பெயில்','பெயில்' என்றேன் அவ்வளவுதான் இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து என்னை நீக்கியுள்ளனர் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

இராஜாங்க அமைச்சர்

## பதவியிலிருந்து நீக்கப்பட்டார் சுசில்

கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த, உடனடியாக அமலுக்கு வரும் வகையில் இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

இந்தியாவுடனான ஒப்பந்தத்துக்கும் மாகாண சபைத் தேர்தலுக்கும்

# தொடர்பு இல்லை

■ மகேஸ்வரி விஜயனந்தன்

இந்தியாவுடனான திருகோணமலை எண்ணைய் தாங்கி ஒப்பந்தத்துக்கும் மாகாண சபைத் தேர்தலுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று தெரிவித்த எரிசக்தி அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான உதய கம்மன்பில, மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அரசாங்கத்தால் அண்மைய நாள்களாக எவ்வித கலந்துரையாடல்களும் முன்னெடுக்கப்படவில்லை



என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (04) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், மேலும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு இலங்கைக்கு எந்தவொரு வெளிநாடும் அழுத்தம் விடுக்கவில்லை எனத் தெரிவித்த அவர், எந்த நாட்டினதும் அழுத்தத்துக்கு அடிபணியும் கலாசாரம் எமது நாட்டில் இல்லை என்று குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## புதிய அமைச்சை விரும்புகிறார் பந்துல

வேறோர் அமைச்சுக்கு தான் நியமிக்கப்பட்டால் அதிக பங்களிப்பை வழங்க முடியும் என்று தெரிவித்த வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன, அதிக சவால்கள் உள்ள மற்றுமோர் அமைச்சையே தான் விரும்புவதாக தெரிவித்தார்.



மிகவும் பரபரப்பாக பேசப்படும் அமைச்சரவை மாற்றம் விரைவில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் ஊடகங்களுக்கு நேற்று (04) கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இந்த அமைச்சும் நன்றாக இருக்கிறது; அமைச்சுக்கு அதிக சவால்கள் இருந்தால் நான் அதிகமாக திட்டப்படுவேன். அத்தகைய அமைச்சையே ஏற்க நான் ஆர்வமாக உள்ளேன்" என்றார்.

தொடர்ச்சி P2

## சுசிலுக்காக டலஸ் கவலை

■ மகேஸ்வரி விஜயனந்தன்

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பதவி நீக்கம் செய்யப்பட்டமை தொடர்பில் தனிப்பட்ட ரீதியில் கவலையடைவதாகத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான டலஸ் அழகப்பெரும, அவரது பதவி நீக்கம் தொடர்பில் அமைச்சரவை சந்திப்பில் கலந்துரையாடப்படவில்லை என்பதுடன், ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்துக்கு அமையவே அவர் பதவி நீக்கப்பட்டுள்ளார் என்றார்.

தொடர்ச்சி P2



திருமலை எண்ணெய்த் தாங்கி தொகுதியில்

## அபிவிருத்தி பணிகளுக்கு அனுமதி

■ மகேஸ்வரி விஜயனந்தன்

திருகோணமலை எண்ணெய் தாங்கி தொகுதியில் இந்தியாவுடன் இணைந்து கூட்டிணைந்த அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என தெரிவித்த எரிசக்தி அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான உதய கம்மன்பில, எரிசக்தி அமைச்சர் என்ற ரீதியில் தான் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

நீதிமன்ற அவமதிப்பு விவகாரம்

## மதியம் கைது: மாலையில் பிணை



நீதிமன்றத்துக்கு முன்னால் போராட்டம் நடத்தி மன்றை அவமதித்து அதன் சொத்துகளுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டு தொடர்பில் நேற்று (04) பிற்பகல் கைதுசெய்யப்பட்ட முன்னிலை சோசலிச கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவயை பிணையில் செல்ல, கடுவெல நீதவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

தொடர்ச்சி P2

பதவி நீக்கப்பட்ட சுசில்

## மலையக மக்களுக்கு ஆதரவாகப்பேசியவர்



"நுவரெலிய மாவட்டத்தில், புதிய பிரதேச சபைகள் அமைத்தே ஆக வேண்டும்" என, அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நான் கடும் வாய்த்தர்க்கம் செய்த போது, எனக்கு ஆதரவாகப் பேசிய முதல் சிங்கள அமைச்சர், சுசில் பிரேமஜயந்ததான் என, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சீன ஜனாதிபதிக்கு விஜயதாஸ கடிதம்



ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ, சீனத் தூதுவர் ஊடாக சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங்குக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

'தங்களுக்குக் கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே தற்போதைய அரசாங்கம் ஜனநாயக முறையில் கவிழ்க்கப்படும்' என அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

எதிர்வரும் வாரங்களில்

## ஒமிக்ரான் அலை ஏற்படும் அபாயம்

கொரோனா வைரஸின் ஒமிக்ரான் மாறுபாடு பரவுவதற்கான அதிக சாத்தியக்கூறுகள் காணப்படுவதால் அடுத்த சில வாரங்களில் இலங்கையில் பாரிய தொற்றுநோய் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக விசேட வைத்தியர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

சங்கத்தின் தலைவர் டொக்டர் லக்குமார் பெர்னாண்டோ, செயலாளரும் சிறப்பு வைத்தியருமான ஆர்.



ஞானசேகரன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்விடயம் குறிப்பிடப்ப்பட்டு உள்ளது.

நாட்டில் மாறுபாடுகளை அடையாளம் காணும் திறன் குறைவாக இருந்தாலும், நாட்டில் ஏற்கெனவே 47 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இது டெல்டா மாறுபாட்டை விட அதிகமாகப் பரவுவதாகத் தோன்றுகிறது. இதன் விளைவாக, பூஸ்டர் டோஸ்கள் உடனடியாக பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். சரியான சுகாதார நடைமுறைகளை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் என்றும் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

எஜமானி வெட்டிக் கொலை

## வேலைக்காரிக்கும் தந்தைக்கும் 18 வரை விளக்கமறியல்

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு பார் வீதியில் பெண் ஒருவரை கண்டம் துண்டமாக வெட்டிக் கொலை செய்து, தங்க ஆபரணங்களை கொள்ளையிட்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்ட வேலைக்காரியையும் அவரது தந்தையையும் எதிர்வரும் 18 திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம்.றிஸ்வான், காணொளி மூலம் நேற்று (04) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

## வருட இறுதிக்குள் அரசாங்கம் வெடித்துச் சிதறும்

இந்த வருட இறுதிக்குள் அரசாங்கம் வெடித்துச் சிதறப் போகிறது என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது என, ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழுக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கம் வெடித்தாலும் மக்களைக் காக்கும் தலைமைத்துவம் ஐக்கிய தேசிய கட்சிக்கு மட்டுமே உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



## போக்குவரத்து சபைக்கு பஸ்களும் பொலிஸாருக்கு ஜீப்களும் கொள்வனவு

இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ், 32 ஆசனங்களைக் கொண்ட 500 புதிய பஸ்களை இலங்கை போக்குவரத்து சபை கொள்வனவு செய்யவுள்ளதுடன், பொலிஸ் விசேட அதிரடிப் படைக்கு 150 ஜீப்கள் உள்ளடங்கலாக 750 ஜீப்களை இலங்கை பொலிஸார் கொள்வனவு செய்ய உள்ளனர் என்றும் தெரியவருகிறது.

அதன்படி, பஸ் கொள்வனவுக்கான அமைச்சரவை அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், பஸ்களை கொள்வனவு செய்வதற்கான முன்தேவைகளை நிறைவேற்றிய 03 நிறுவனங்களிடமிருந்து விலைமனு கோரப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

தொடர்ச்சி P2

## TIKTOK ஆல் இளைஞன் படுகொலை

கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில், வெல்லம்பிட்டியைச் சேர்ந்த 17 வயதான அப்துல் லத்தீப் என்ற இளைஞன், டிக் டொக் சமூக ஊடக வலையமைப்பால் ஏற்பட்ட மோதலால், படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

ரந்திய உயன தொடர்மாடி குடியிருப்புக்கு தனது நண்பர்களுடன் குறித்த இளைஞன், மோட்டார் சைக்கிளில் நேற்று முன்தினம் (03) சென்றுள்ளார்.

அவர்களைப் பின்தொடர்ந்து வந்த மற்றுமொரு தரப்பினர், டிக் டொக் வீடியோ தொடர்பில் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் பின்னர், மறைத்து வைத்திருந்த கத்தியால் அவ்விளைஞனின் அடிவயிற்றில் குத்தியுள்ளனர்.

அதன்பின்னர், அங்கிருந்து அவர்கள் தலைமறைவாகிவிட்டனர் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது எனத் தெரிவித்த கிராண்ட்பாஸ் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

PAGE 1 தொடர்ச்சிகள்

# 'பெயில்' தூக்கியது

மூன்று ஜனாதிபதிகளின் கீழ் பணியாற்றியுள்ளேன். பாராளுமன்றத்துக்கு முதன்முறையாக தெரிவுசெய்யப்பட்டவுடன் 2000ஆம் ஆண்டு அமைச்சராக நியமிக்கப்பட்டேன் என்றும் சுட்டிக்காட்டினார்.

கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைதூரக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சிலிருந்து, நேற்று (04) காலை வெளியேறிய போதே இவ்விடயத்தை அவர் அறிவித்தார். அதன்பின்னர், ஓட்டோவொன்றை வாடகைக்கு அமர்த்தி, அமைச்சிலிருந்து புறப்பட்டு வெளியேறிவிட்டார்.

பதவியிலிருந்து நீக்கியதற்கான காரணத்தை எனக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. ஜனாதிபதி, தனக்கு இருக்கும் அதிகாரங்களை பயன்படுத்தி ஒருவரை நீக்கலாம் மற்றுமொருவரை நியமிக்கலாம். ஆனால், நான் எனது பழைய தொழிலான சட்டத்தரணி தொழிலை நாளை (05) முதல் முன்னெடுப்பேன் என தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து தன்னை நீக்கியமை, எதிர்கால அரசியலுக்கு கிடைத்த ஆசீர்வாதமாகும் எனத் தெரிவித்த சுசில் பிரேமஜயந்த, பொருளாதார ரீதியில் நாடு எங்கு செல்கின்றது என்பது எல்லோருக்கும் நன்கு தெரியும் என்றார்.

# தொடர்பு இல்லை

அத்துடன், திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் தொடர்பில் இந்தியாவுடன் ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திடுவதற்கான யோசனைக்கு அமைச்சரவையால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றார்.

இந்த விடயம் தொடர்பில் இந்தியாவுடன் 16 மாதங்கள் தொடர்ச்சியாக கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவித்த அவர், இறுதியில் திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் தொடர்பில் இரு நாடுகளும் இணைந்த கூட்டு அபிவிருத்தி திட்டத்தை நடைமுறைப்படுத்தவது தொடர்பான இணக்கப்பாட்டுக்கு வந்ததாகவும் இது தொடர்பான ஒப்பந்தம் அடுத்த வாரமளவில் கைச்சாத்திடப்படும் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

# அபிவிருத்தி பணிகளுக்கு அனுமதி

அதற்கமைய இது தொடர்பான ஒப்பந்தம் அடுத்த வாரத்துக்குள் கைச்சாத்திட நாம் எதிர்பார்க்கின்றோம் என்றும் குறிப்பிட்டார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (04) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தொடர்ந்து தெரிவித்த அவர், 80 இலட்சம் எண்ணெய் பரல்களை ஒரே நேரத்தில் சேமித்து வைக்கக் கூடிய வசதியைக் கொண்ட, உலகில் மிகவும் சிறந்த எண்ணெய் தாங்கி தொகுதியான திருகோணமலை எண்ணெயத் தாங்கி தொகுதி அமைக்கப்பட்டு 100 வருடங்கள் அண்மித்தாலும் இன்று வரை அதன் மூலம் எவ்வித பயனையும் பெற்றுக்கொள்ளாமல் உள்ளோம் என்று சுட்டிக்காட்டினார்.

இவ்வாறானதொரு எண்ணெய் தாங்கி தொகுதி இருக்கும் போது, நாம் பல பில்லின்களை செலவிட்டு, கொலன்னாவையிலும் முத்துராஜவலையிலும் தாங்கிகளை அமைத்துள்ளோம் எனவும் தெரிவித்தார்.

**"உலகில் மிகவும் சிறந்த எண்ணெய் தாங்கி தொகுதியான திருகோணமலை எண்ணெயத் தாங்கி தொகுதி அமைக்கப்பட்டு 100 வருடங்கள் அண்மித்தாலும் இன்று வரை அதன் மூலம் எவ்வித பயனையும் பெற்றுக்கொள்ளாமல் உள்ளோம்**

திருகோணமலை எண்ணைத் தாங்கி சிறந்த முறையில் இருக்கும் நிலையில் தான், தமது தேவைகளுக்காக கடந்த அரசாங்கங்களால் புதிய தாங்கி அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டது என்றார்.

தான் அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்ற நாள் தொடக்கம், பிரயோசனமற்ற நிலையில் உள்ள எண்ணெய்த் தாங்கிகளை பிரயோசனப்படுத்துவதற்காக, 16 மாதங்கள் இந்தியாவுடன் முன்னெடுத்த கலந்துரையாடலை வெற்றிகரமாக நிறைவு செய்ய எம்மால் முடிந்தது என குறிப்பிட்டார்.

அமைச்சரவையின் அனுமதிக்கு அமைய, குறித்த அனைத்து தாங்கிகளும் முதலில் இலங்கை அரசுக்கு கிடைக்கும் என்பதுடன், வரி ஒப்பந்தம் மூன்றின் ஊடாக 24 தாங்கிகள் எரிபொருள் கூட்டுதாபனத்துக்கும் 14 இலங்கை ஐ.ஓ.சி நிறுவனத்துக்கும் 61 எரிபொருள் கூட்டுதாபனம் மற்றும் எல்.ஐ.ஓசி நிறுவனத்தின் பங்குரிமை வர்த்தகத்துக்கும் 50 வருடத்துக்கு குத்தகைக்கு வழங்க எதிர்பார்க்கிறோம் என்றார்.

# புதிய அமைச்சை விரும்புகிறார் பந்துல

அரிசியின் விலையை இன்று முதல் குறைக்க உத்தரவிட்டுள்ளதாகவும் அமைச்சர் பந்துல தெரிவித்தார்.

# மதியம் கைது; மாலையில் பிணை

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட திறந்த பிடியாணையின் பேரில் சந்தேகநபர் பொரளையில் வைத்து கைது செய்யப்பட்டதாக கடுவெல பொலிஸார் தெரிவித்தனர்.

அவரை, நேற்றையதினமே கடுவெல நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது தலா 500,000 ரூபாய் பெறுமதியான இரு சரீரப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிமன்றம், வழக்கை பெப்ரவரி 1ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட மூலத்துக்கு எதிராக பாராளுமன்ற சுற்றுவட்டத்தில் இடம்பெற்ற போராட்டம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர் சம்மேளனத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட ஐவருக்கு பிணை வழங்குமாறு கோரி சந்தேகநபர் உள்ளிட்ட குழுவினர் நவம்பர் 04ஆம் திகதி, நீதிமன்றத்துக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்தே நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் சந்தேக நபருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வேலைக்காரிக்கும் தந்தைக்கும் 18 வரை விளக்கமறியல்

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி பார் வீதியிலுள்ள எஜமானியான 48 வயதுடைய செல்வராசா தயாவதியை கண்டம் துண்டமாக வெட்டி கொலை செய்துவிட்டு அங்கிருந்த 46 பவுண் தங்க ஆபரணங்களை கொள்ளையிட்டு சென்ற வேலைக்காரியையும் அவரது தந்தையையும் பொதுமக்கள் மடக்கி பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த இருவரையும் கைது செய்த பொலிஸார், டிசெம்பர் மாதம் 21ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது அவர்களை நேற்று (04) வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

குறித்த வழக்கு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி. எம்.றிஸ்வான் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்போது கொரோனா காரணமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபர்கள் இருவரையும் நீதிமன்றத்துக்கு அழைத்து வரமுடியாமை தொடர்பில் மன்றுக்கு அறிவிக்கப்பட்டது. பின்னர், காணொளி மூலம் தொடர்ந்து 18ஆம் திகதிவரை சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான், 11ஆம் திகதி மரண விசாரணையை மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டார்.

# பதவியிலிருந்து நீக்கப்பட்டார் சுசில்

கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைதூரக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சராகப் பணியாற்றிய அவர், தமது பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாகவே இந்த நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கம் தன்னால் செய்ய முடியாத விடயங்களைச் செய்து நாட்டைப் பிரச்சினைக்குள்ளாக்கச் சென்றுள்ளது என்ற கருத்தை தெல்கடபொல வளாகத்தில் அண்மையில் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சுசிலுக்காக டலஸ் கவலை

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (04) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், அவரின் பதவி நீக்கம் தொடர்பில் நானும் ஊடகங்கள் வாயிலாகவே அறிந்துகொண்டேன். பதவி நீக்கத்துக்கான காரணம் தெரியவில்லை. நாளை இதற்கான காரணம் தெரியவரலாம் என்றார்.

கருத்து சுதந்திரமானது சில உண்மையான தகவல்களின் அடிப்படையில் முன்வைக்கப்படும் எந்தவொரு கருத்தையும் ஏற்றுக்கொள்ள நாம் ஜனநாயக சமூகத்தில் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். அதற்கான தடை எந்த சந்தர்ப்பத்திலும் ஏற்படுத்தப்படாது என தெரிவித்தார்.

கருத்து மற்றும் பேச்சுச் சுதந்திரத்தை தடுப்பதற்கு நாம் செயற்படுவதில்லை. அவ்வாறு செயற்பட்டதும் இல்லை. ஏதாவது ஒரு சந்தர்ப்பில் கருத்து சுதந்திரத்தை பாதுகாக்கும் பொறுப்பு உள்ளது. எந்தவொரு ஜனநாயக நாட்டிலும் கருத்து மற்றும் பேச்சுச் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும். அது அடிப்படை நிபந்தனையாகும் என்று சுட்டிக்காட்டினார். அதேபோல் ஜனாதிபதியை சமூக வலைத்தளங்கள் ஊடாக விமர்சிப்பவர்கள் கைதுசெய்யப்படுவர் என வெளியாகும் தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை எனத் தெரிவித்த அவர், ஆனால் முன்வைக்கப்படும் விமர்சனங்கள் நியாயமானதாக இருக்க வேண்டும் என்றார்.

# சீன ஜனாதிபதிக்கு விஜயதாஸ கடிதம்

"கடந்த 15 வருடங்களில் வெளிநாடுகளுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் அனைத்தும் மீண்டுமொருமுறை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு ஊழல் மோசடிகளை ஒழிக்கும் ஒப்பந்தங்கள் அனைத்தும் ஒழிக்கப்படும்" என கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ, சீன ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். இலங்கையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத் தேர்தல் பொது வாக்கெடுப்பின் கீழ் நடத்தப்படும். இலங்கைக்கு பாதகமாக நிரூபிக்கப்பட்ட ஒப்பந்தங்களை மறுசீரமைப்பதற்கு அல்லது இரத்து செய்வதற்கு பொதுமக்களின் அதிகாரம் பயன்படுத்தப்படும்.

**"கடந்த 15 வருடங்களில் வெளிநாடுகளுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் அனைத்தும் மீண்டுமொருமுறை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு ஊழல் மோசடிகளை ஒழிக்கும் ஒப்பந்தங்கள் அனைத்தும் ஒழிக்கப்படும்**

செலந்திவா முதலீட்டின் ஊடாக இலங்கையின் நிலத்தை சீனா அபகரிக்க முயற்சித்தால் உடனடியாக பதவி நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அக்கடித்தில் விஜயதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

# வருட இறுதிக்குள் அரசாங்கம் வெடித்துச் சிதறும்

கட்சி என்ற ரீதியில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டோம். தற்போது கட்சியை பலப்படுத்த பல கட்சிகள் எமக்கு ஆதரவளித்து வருகின்றன என்று தெரிவித்த அவர், ஐக்கிய தேசிய கட்சிக்கு இது ஒரு முக்கியமான ஆண்டாகும் என்றார்.

# ஓமிக்ரான் அலை ஏற்படும் அபாயம்

ஓமிக்ரான் மாறுபாடு நாட்டில் பரவிக்கொண்டிருந்தாலும் பண்டிகைக் காலங்களில் கடைகள், பார்கள், இரவு விடுதிகள், டிசெம்பர் 31 இரவு போன்றவற்றில் ஏற்பட்ட நெரிசலைக் கருத்தில் கொண்டு, தொற்றுநோய்களின் பெரும் அலை தவிர்க்க முடியாதது. உலகின் பல பகுதிகளிலும் வேகமாகப் பரவிவரும் ஓமிக்ரான் மாறுபாடு, இதுவரை ஆதிக்கம் செலுத்தி வந்த டெல்டா வகையை விஞ்சி பரவுவதற்கான அதிக சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது. நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தால், அது நாட்டின் சுகாதார அமைப்பையும், நாட்டின் பொருளாதாரத்தையும் பாதிக்கும் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



**"பண்டிகைக் காலங்களில் கடைகள், பார்கள், இரவு விடுதிகள், போன்றவற்றில் ஏற்பட்ட நெரிசலைக் கருத்தில் கொண்டு, தொற்றுநோய்களின் பெரும் அலை தவிர்க்க முடியாதது. வேகமாகப் பரவிவரும் ஓமிக்ரான் டெல்டாவை விஞ்சி பரவுவதற்கான வாய்ப்புகள் உண்டு**

# போக்குவரத்து சபைக்கு பஸ்களும் பொலிஸாருக்கு ஜீப்களும் கொள்வனவு

அந்த ஏலங்களின் மதிப்பீடுகளைத் தொடர்ந்து, அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையான கொள்முதல் குழு அளித்த பரிந்துரையின்படி, இந்தியாவின் அசோக் லேலண்ட் நிறுவனத்திடம் இருந்து இந்தப் பஸ்களை வாங்குவதற்கு போக்குவரத்து அமைச்சர் சமர்ப்பித்த முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

இதேவேளை, பொலிஸ் விசேட அதிரடிப் படைக்கு 150 ஜீப்கள் உள்ளடங்கலாக 750 ஜீப்களை, இந்திய கடன் வரியின் கீழ் இலங்கை பொலிஸார் கொள்வனவு செய்ய உள்ளனர்.

இந்திய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கியால் பரிந்துரைக்கப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து ஏலம் கோரப்பட்டு, மேற்கண்ட கொள்முதலை இந்தியாவின் மஹிந்திரா நிறுவனத்துக்கு வழங்குவதற்காக பொது பாதுகாப்பு அமைச்சரின் முன்மொழிவுக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

# மலையக மக்களுக்கு ஆதரவாக பேசியவர்

பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தொடர்பில் மனோ எம்.பி, நேற்று (04) வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மனோ எம்பி மேலும் குறிபபிட்டிருப்பதாவது: அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கொழும்பு பெஜட் வீதி இல்லத்தில் நடைபெற்ற விசேட அமைச்சரவை கூட்டத்தில், நுவரெலியா மாவட்டத்தில் இருக்கின்ற மிகப்பெரிய அம்பகமுவ, நுவரெலியா பிரதேச சபைகளை பிரித்து, புதிய பிரதேச சபைகளை அமைக்க வேண்டும் என நான் கோரினேன்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, "அம்பாறை மாவட்டத்திலும் புதிய பிரதேச சபைகளை அமைப்பதாக தேர்தல் பிரசாரத்தின் போது, அமைச்சர் ரவூப் ஹக்கீமின் மேடையில் இருந்து அந்த மக்களுக்கு உறுதி அளித்துள்ளேன். அந்த சபைகள் இன்னமும் அமைக்கப்படவில்லை. ஆகவே அம்பாறை மாவட்டத்தில் புதிய சபைகள் பிறகு அமைக்கப்படும் போது, இதையும் அப்போது அமைப்போம். இப்போது இதை ஒத்தி வைப்போம். இப்போது இதை அமைத்தால், ஏன் நுவரெலியாவில் மட்டும் அமைக்கிறீர்கள்? ஏன் அம்பாறையில் அமைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு எழும்" என்றார்.


"அம்பாறை மக்களுக்கு நீங்கள் வாக்குறுதியளித்து இருந்தீர்கள் என்றால் அதை நிறைவேற்றுங்கள். அது உங்களுக்கும் அமைச்சர் ஹக்கீமுக்கும் இடைப்பட்ட பிரச்சினை. ஆனால், நுவரெலியா வேறு. அம்பாறை வேறு. தமிழ் முற்போக்கு கூட்டணியாக நாங்களும் எங்கள் மக்களுக்கு வாக்குறுதி அளித்துள்ளோம்.

நாட்டில் ஏனைய பிரதேசங்களில் 25,000 பேருக்குகூட ஒரு பிரதேச சபை இருக்கும் போது, தலா இரண்டரை இலட்சம் ஜனத்தொகை கொண்டதாக அம்பகமுவ, நுவரெலிய பிரதேச சபைகள் 30 வருடங்களாக செயற்படுகின்றன. இது மிகப்பெரும் அநீதி. பாரபட்சம். எமக்கு கட்டாயம் புதிய பிரதேச சபைகள் அமைத்தே ஆகவேண்டும்" என சிங்களத்தில் கடுமையாக சத்தம் போட்டேன்.

இதை கூறி விட்டு, நான் அமர்ந்திருந்த நாற்காலியை உதைத்து விட்டு, கூட்டத்திலிருந்து, வெளியேற கோபத்துடன் எழுந்த போது, எனக்கு ஆதரவாக "மனோ எமதிதுமாகே இல்லீம இதாம சாதாரணய்" (அமைச்சர் மனோவின் கோரிக்கை மிகவும் நியாயமானது) என சொன்ன நண்பர்தான், அன்றைய அமைச்சர் சுசில் பிரேமஜயந்த.

அதன் பிறகுதான் இன்று நுவரெலியாவில் செயற்படும், நோர்வூட், மஸ்கெலியா, அம்பகமுவ, அக்கரபத்தனை, தலாவக்கலை, நுவரெலிய ஆகிய ஆறு புதிய பிரதேச சபைகளை அமைக்கும் வர்த்தமானியை வெளியிட அன்றைய அரசாங்கம் இணங்கியது என்று மனோ தெரிவித்துள்ளார்.

# அதிகாரிகளின் விருப்பம் நெருக்கடிக்கு வித்திடும்



இதுவரை செயற்பட்ட விதத்திலேயே, வைத்திய நிபுணர்களின் இடமாற்ற சபையை எதிர்காலத்திலும் செயற்படுத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ தெரிவித்தார்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருடன் அலரி மாளிகையில் நேற்று (04) நடைபெற்ற கலந்துரையாடலின் போது பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுவரை காணப்பட்ட செயல்முறையை சில அதிகாரிகளின் விருப்பத்திற்கு ஏற்ப மாற்ற முயற்சிப்பதன் ஊடாக நெருக்கடிகள் ஏற்படுமென சுட்டிக்காட்டிய பிரதமர், அரசியல் நோக்கில் சென்று அரசாங்கத்தை அசௌகரியத்துக்கு உட்படுத்தாது தொழிற்சங்கங்களுடன் நிறுவன சட்டவிதிகளுக்கு அமைவாக செயற்படுமாறு சுகாதார அமைச்சின் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

வைத்திய நிர்வாகத்தை சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட என இரு பிரிவுகளாக பிரித்து செயற்படுத்தாது ஒரே அடிப்படையில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் சார்பில் கருத்து தெரிவித்த விசேட வைத்திய நிபுணர் அநுருத்த பாதெனிய இதன்போது முன்மொழிவொன்றை முன்வைத்தார்.

## முட்டாள்தனமான தீர்மானங்களுக்காக

# மன்னிப்புக் கேட்க வேண்டும்



உரம், சமையல் எரிவாயு பிரச்சினைகள் நாட்டில் உருவாக்கப்பட்டவை. முட்டாள்தனமான தீர்மானங்களே இப்பிரச்சினைகளுக்குக் காரணமாகும். எனவே, அதற்காக, மக்கள் முன்பு மன்னிப்புக்கேட்க வேண்டுமென ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரகொடி தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், அரசாங்கத்தின் ஊடாக ஒரு சிலருக்காவது நிவாரணங்கள் கிடைக்கின்றன என்பது மகிழ்ச்சியே. எனினும், இதனூடாக நாட்டின் ஒட்டுமொத்தப் பிரச்சினைகளையும் தீர்க்க முடியாது என்றார்.

கொரோனா வைரஸால் நாட்டில் சில பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன என்பது உண்மை. ஆனால், சிலரது செயற்பாடுகள் காரணமாக நாட்டுக்குள் சில பிரச்சினைகளை ஏற்பட்டுள்ளன. இதனை மக்கள் தாங்கிக்கொள்ள வேண்டுமென கூறுவதற்கு மனசாட்சி இடங்கொடுக்காது.

உரம், சமையல் எரிவாயு தட்டுப்பாடு ஆகிய பிரச்சினைகள் நாட்டில் உருவாக்கப்பட்டவை. இதுபோன்ற முட்டாள்தனமான தீர்மானங்களை எடுத்தமைக்காக மக்களின் முன்பு வந்து மன்னிப்புக் கேட்டுப்பிரச்சினையை தீர்க்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# ஐக்கிய நாடுகள் சபை இலங்கையைப் பாராட்டியது



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவுக்கும், ஐக்கிய நாடுகள் சபையின் உதவிப் பொதுச் செயலாளர் கனி விக்னராஜாவுக்கும் இடையில் நேற்று (04) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பின்போதே அரசாங்கத்தின் பசுமை விவசாய வேலைத்திட்டம் பாராட்டப் பெற்றுள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது, 2021 பேண்தகு அபிவிருத்தி அறிக்கையின்படி இலங்கை மேலும் ஏழு புள்ளிகளைப் பெற்று, 165 நாடுகளில் 87ஆவது இடத்தைப் பெற்றுள்ளதென, விக்னராஜா இதன்போது ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

மேலும் இதனை மேம்படுத்தி, பசுமை விவசாய வேலைத்திட்டத்துக்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

கொவிட் தொற்றுப் பரவல் காரணமாக ஏற்பட்டுள்ள சமூகப் பொருளாதார பாதிப்புகள் தொடர்பில் உரையாற்றும் போது, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்காக இலங்கை முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

“காலநிலை மாற்றத்துக்கு நிலையான தீர்வுகளுடன் கூடிய பசுமை இலங்கையை உருவாக்குவதற்கான ஜனாதிபதிச் செயலணி மற்றும் பொருளாதாரப் புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான செயலணி உள்ளிட்ட முறையான கட்டமைப்பு ஒன்று இதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது” எனவும் ஜனாதிபதி இதன்போது கூறியுள்ளார்.

# கதை சொல்லித் திரியாதீர்கள்

## அரச ஊழியர்களுக்கு ஆளுநர் அறிவுரை



அரச ஊழியர்கள் ஆங்காங்கே கதை சொல்லித் திரிய வேண்டாம்; அரசியல் பேசி நேரத்தை வீணடிக்க வேண்டாம் எனத் தெரிவிக்கும் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில், மேலும் மூன்று வருடங்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ இந்நாட்டை முன்னெடுத்துச் செல்வார் என தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், 2021ஆம் ஆண்டில் கொவிட் பரவலைக் கட்டுப்படுத்துவதில் நாம் வெற்றிகண்டுள்ளோம். என்றாலும் பொருளாதார ரீதியில் நாம் பெரிதும் பாதிக்கப்பட்டோம். சுற்றுலாத்துறை முழுமையாக வீழ்ச்சியடைந்தது. சுற்றுலா விடுதிகளில் பணிபுரிந்த பல இலட்சம் பேருக்குத் தொழில் இல்லாமல்போனது. இதுபோன்ற பல பொருளாதார நெருக்கடிகளுக்கு அரசாங்கம் முகங்கொடுக்க நேர்ந்தாலும், அரச ஊழியர்களின் சம்பளத்தை அரசாங்கம் ஒருநாள் சரி தாமதிக்காமல் வழங்கியது என்றார்.

அரச ஊழியர்கள் அலுவலக நேரங்களில் ஆங்காங்கே கதை சொல்லித் திரிய வேண்டாம். அரசியல் பேசி நேரத்தை வீணடிக்க வேண்டாம். மேலும் மூன்று வருடங்களுக்கு ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்‌ஷ இந்த நாட்டை முன்னெடுத்துச் செல்வார். எமக்கு எமது நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும். எமது நாட்டின் எதிர்காலம் தொடர்பில் எமக்கு நம்பிக்கை வைக்கமுடியுமெனவும் தெரிவித்தார்.

# வேலைகள் ஆரம்பம்...

2022ஆம் ஆண்டு புதுவருடத்தை முன்னிட்டு சர்வ மத வழிபாடுகளுடன் இலங்கை விமானப்படையின் பணிகள் ஆரம்பிக்கப்படுவதை படங்களில் காணலாம்



# முதலையை பிடிக்க தொடர்ந்தும் முயற்சி

தெஹிவளை கடற்கரையில் நபரை தாக்கிக்கொன்ற முதலையை பிடிக்கும் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக வனஜீவராசிகள் அமைச்சர் சி.பி.ரத்நாயக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், கடலில் முதலையை பிடிப்பது சிரமமான ஒன்று. இன்று தெஹிவளையில் இருந்தால் நாளை அது பாணந்துறையில் இருக்கும். எனவே இதனை பிடிப்பது சிரமமானது என்றார்.

இதேவேளை, இந்த முதலையை பிடிப்பது தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. கடற்படையினருடன் இணைந்து முதலையை பிடிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை கடலில் வைத்து முதலை தாக்கி ஒருவரை கொன்றுள்ள சம்பவம் இதுவே முதற்தடவை என பிரதேசவாசிகள் தெரிவிக்கிறார்கள். இதேவேளை முதலைலைய பிடிக்கும் செயற்பாடுகள் கடந்த இரு தினங்களாக தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முன்னரே எடுத்திருக்க வேண்டிய முடிவு



இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவை, பதவியிலிருந்து நீக்கியமை ஜனாதிபதியின் சரியான முடிவெனத் தெரிவித்துள்ள அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, இது சரியான முடிவாகும். அந்த முடிவு முன்னரே எடுத்திருக்க வேண்டிய முடிவாகும் என்றார்.

சுசில் பிரேமஜயந்த அரசாங்கத்தையும் திட்டங்களை போன்றே கொள்கைகளையும் பல சந்தர்ப்பங்களில் விமர்சித்துள்ளார். அரசாங்கத்தின் கொள்கைகளை பாதுகாக்கும் பொறுப்பு எமக்கு உள்ளது. கொள்கைகளில் தவறு இருந்தால், அதைப் பற்றி பேச உரிய இடங்கள் உள்ளன. அது பற்றி அமைச்சரவையில் பேசலாம் என்றார்.

இராஜாங்க அமைச்சர்கள் ஜனாதிபதியை சந்திக்கின்றனர். அந்த சமயங்களில் அதைப் பற்றி பேசலாம். அவர்கள் ஒரு குழுவுக்காக விளையாடினால், அந்த குழுவுக்குள் பேச வேண்டும். அவர்கள் வெளியில் பேசக்கூடாது. மூத்த அமைச்சர்கள் என்ற முறையில் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும். முதுகெலும்பு நேராக இருக்க வேண்டும் என்றார்.

அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை புரிந்து கொள்ளாமல் அமைச்சுப் பதவியை வகிப்பது ஏற்புடையதல்ல. வெளியில் செய்யும் அரசியலை அமைச்சரவையில் செய்ய முடியாது. அமைச்சரவைக்குள் எதனையும் பேசி தீர்த்துக்கொள்ள ஜனாதிபதி பூரண சுதந்திரம் வழங்கியுள்ளார். மேலும் குழு கூட்டங்களில் பேசலாம் என்றார்.

பயமுறுத்துவதற்காக நாம் யாரும் இவற்றைச் செய்வதில்லை. அரசியல் செய்யத் தெரிந்திருக்க வேண்டும். அரசியல் செய்யும்போது கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் குறித்து விழிப்பாக இருக்க வேண்டும். அரசாங்கத்தை விமர்சிப்பதுதான் எதிர்க்கட்சிகளின் பணி. அரசாங்கத்துக்குள்ளேயே அமர்ந்து எதிர்க்கட்சி வேடம் போட வேண்டிய அவசியம் இல்லை. இந்த சம்பவத்தை விளம்பரப்படுத்துவதில் எதிர்க்கட்சிகள் இப்போது முட்டாள்தனமான மகிழ்ச்சியை அனுபவிக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

## இரு வாரக் கொண்டாட்டங்கள்:

# பிரதிபலன்கள் எவ்வாறு இருக்குமெனத் தெரியாது



நத்தார் பண்டிகை, புதுவருடப் பிறப்பென கடந்த இரு வாரங்களாக நாடுமுழுவதிலும் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகளில் மக்கள் பெருமளவு ஒன்றுகூடியதாக தெரிவித்த விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத், இதன் பிரதிபலன்கள் அடுத்த இரு வாரங்களில் எவ்வாறு இருக்கமென தெரியாது என்றார்.

எங்களால் செய்ய கூடிய அனைத்தையும் செய்து தொற்றாளர்களின் எண்ணிக்கையை குறைப்பதே முக்கியமான ஒன்று. கடந்த காலங்களைப் போல அல்லாது நாளாந்தம் இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையை குறைவான மட்டத்தில் வைத்திருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஒமிக்ரோன் வைரஸ் தொற்றாளர்கள் இலங்கையில் இனங்காணப்பட்டுள்ளனர். ஒமிக்ரோன் வைரஸ் இலங்கையில் பரவுகிறது என்பது இரகசியமான ஒன்றல்ல எனவும் கூறினார். ஒமிக்ரோன் போல நாட்டில் டெல்டா வைரஸ் பரவியபோதும், அதனை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாலும், நாட்டின் பெரும்பாலான மக்கள் சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களை தொடர்ந்து பின்பற்றியதாலும் அந்த வைரஸால் ஏற்படவிருந்த பாரதூரமான அசம்பாவிதங்கள தடுக்கப்பட்டன எனவும் கூறினார். இவ்வாறு செயற்படுவதனூடாக ஒமிக்ரோன் வைரஸ் பேரழிவில் இருந்தும் நாட்டை காப்பாற்ற முடியும். குறிப்பாக தடுப்பூசிகளை செலுத்திக்கொள்ளாதவர்கள் விரைவாக தடுப்பூசிகளை முழுமையாக செலுத்திக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# கடிதங்களை விநியோகிக்காத ஊழியர் இடைநிறுத்தம்

மகேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை, பலகடுவ பிரதேசம், அதனை அண்டிய பிரதேசங்களில் விநியோகிக்கப்பட வேண்டிய கடிதங்கள் பலவற்றை, ஒருமாதத்துக்கும் மேலாக தன்வசம் வைத்திருந்த தபால் ஊழியரை சேவையிலிருந்து இடைநிறுத்தியுள்ளதாக, மாத்தளை தபால் அத்தியட்சகர் அநுர ரத்நாயக தெரிவித்துள்ளார்.



உக்குவெல தபால் நிலையத்தில் சேவையாற்றிய இந்நபர் விநியோகிக்கப்பட வேண்டிய கடிதங்களை விநியோகிக்காது தன்வசம் வைத்திருந்துள்ளதாகவும், நேர் முகத்தேர்வுக்காக அனுப்பப்பட்ட கடிதங்கள், வங்கியிலிருந்து அனுப்பப்பட்ட கடிதங்கள், ஓய்வூதியக் கடிதங்கள் உள்ளிட்ட பல கடிதங்களை இவர் விநியோகிக்காது வைத்திருந்தார் எனவும் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை வங்கிகளில் அடகு வைக்கப்பட்ட தங்க நகைகளுக்கான கடிதங்கள் பலவற்றை விநியோகிக்காமையால், தங்களது நகைகள் ஏலத்துக்கு விடப்பட்டுள்ளதாகப் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலையில் அடைமழை

# கந்தளாய் பிரதேசத்தில் 57 குடும்பங்கள் பாதிப்பு

■ எப். முபாரக்

திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வருகின்ற அடை மழை காரணமாக, கந்தளாய் பிரதேசத்தில் 57 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக கந்தளாய் பிரதேச செயலக அனர்த்த நிலையப் பிரிவு அறிவித்துள்ளது.

தொடர் மழையால் தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதோடு, வடிகான்களில் வெள்ள நீர் பரவிச் செல்கின்றது.



திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய், தம்பலகாமம், முள்ளிப்பொத்தானை, மூதூர், தோப்பூர் போன்ற பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

கந்தளாய் பிரதேசத்தில் வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளதால், பொது மக்கள் உறவினர்களின் வீடுகளில் தங்கி வருகின்றார்கள்.

சிறு வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதோடு போக்குவரத்துகள் மேற்கொள்ள முடியாமல் உள்ளது. தொடர்ந்தும் மழை பெய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பட்டத் திருவிழாவில் வல்வெட்டித்துறை மண்ணுக்குள்ள

# பெருமை வேண்டும்

ராஜபக்ஷ அரசாங்கத்தின் அனுசரணையுடன் வல்வெட்டித்துறையில் தைப்பொங்கல் தினத்தன்று பட்டத் திருவிழா நடத்தப்படுவதை வன்மையாகக் கண்டித்துள்ள வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், அந்தப் பட்ட திருவிழாவானது வல்வெட்டித்துறை மண்ணுக்குள்ள பெருமையுடன் நடைபெற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு என்றார்.



"நீண்ட இனவழிப்பையும் தமிழர்களின் பூர்வீக நிலங்களை முறையற்ற விதத்தில் பறிப்பதுமென கொடூர ஆட்சி நடத்தும் இந்த அரசாங்க அமைச்சர்களின் பிரசன்னத்துடன் அவர்களின் அனுசரணையுடன் பட்ட திருவிழா நடத்தப்படுவது வல்வெட்டித்துறை மண்ணுக்கும் மக்களுக்கும் செய்யும் துரோகமாகும்" என்றார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் எழுத்து மூல அறிக்கையை இலங்கை அரசாங்கம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் சமர்ப்பிக்க வேண்டும். இந்நிலையில், இனப்படுகொலையை நடத்திய ராஜபக்ஷ குடும்பத்தினரை பிரதம விருந்தினராக அழைத்து இந்தப் பட்டத் திருவிழா நடத்துவது 2009 ஆம் ஆண்டு இனப்படுகொலையை சர்வதேச அரங்கிலிருந்து இல்லாது செய்வதற்குரிய அரசாங்கத்தின் இராஜதந்திர நடவடிக்கையே இதுவாகும் என்றார்.

# காஸ்க்கான காத்திருப்பு




மட்டக்களப்பு மாவட்டத்தில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக, மாவட்டத்துக்கான ஏக விநியோக நிறுவனத்தின் காத்தான்குடியிலுள்ள களஞ்சியசாலைக்கு முன்பாக, சமையல் எரிவாயுவை பெற்றுக் கொள்வதற்காக சிலிண்டர்களுடன் நீண்ட வரிசையில் பொது மக்கள் நேற்று (04) காத்து நின்றனர். (படம்: எம்.எஸ்.எம். நூர்தீன்)

# மன்னாரில் டெங்கொழிப்பு

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில் அதிகரித்துவரும் டெங்கு பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் டெங்கொழிப்பு செயற்றிட்டம் நேற்று (04) முன்னெடுக்கப்பட்டது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, மன்னார் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பிரதேச செயலகம், மாவட்ட செயலகம் இணைந்தே இச்செயற்றிட்டத்தை முன்னெடுத்தன.



வீடுகள், பொது இடங்களில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய சூழல்களை அடையாளப்படுத்தல் மற்றும் அவற்றை அப்புறப்படுத்துதல், நுளம்பு பெருக்கத்துக்கு ஏற்றவகையில் சுற்றுச்சூழலை வைத்திருக்கும் வீடுகளின் உரிமையாளர்களை அடையாளப்படுத்தும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வாரம் முழுவதும் டெங்கொழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டு, மன்னார் மாவட்டத்தில் ஒவ்வொரு கிராமங்களிலும் டெங்கொழிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டு. கிரான்குளத்தில்

# வான் தடம் புரண்டதில் ஐவர் படுகாயம்

■ க. விஜயரெத்தினம்

மட்டக்களப்பு, கிரான்குளம் பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஐந்து பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.



இவ்விபத்தில் படுகாயமடைந்த ஐவரும் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக வாகனத்தில் பயணித்தவர்கள் தகவல்கள் தெரிவிக்கின்றனர்.

அம்பாறை மாவட்டம் ஒலுவில் கிராமத்திலிருந்து குடும்ப உறவினர்கள் ஒன்றிணைந்து திருகோணமலைக்கு நேற்று முன்தினம் (03) சுற்றுலா சென்று வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் வான் பாதையை விட்டு விலகி, இலங்கை மின்சார சபை மின்கம்பத்தில் மோதுண்டு இவ்விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதனால் வான் மற்றும் மின்கம்பம் சேதமடைந்துள்ளன.

இவ்விபத்து சம்பந்தமாக காத்தான்குடி போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


காத்தான்குடியில் வீடொன்றில்

# சமையல் எரிவாயு அடுப்பு வெடிப்பு

■ எம்.எஸ்.எம். நூர்தீன், ரீ.எல். ஜவ்பர்கான்

காத்தான்குடியில் வீடொன்றில் சமையல் எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது. நேற்று (04) நள்ளிரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நள்ளிரவு தூங்கிக் கொண்டிருந்த போது வெடிப்பு சப்தம் கேட்டதாகவும் எழும்பிச் சென்று பார்த்த போது சமையல் எரிவாயு அடுப்பு வெடித்து காணப்பட்டது எனவும் இதையடுத்து சமையல் எரிவாயுவின் வயரை கழற்றியதாகவும் வீட்டு உரிமையாளர் தெரிவித்துள்ளார். இதனால் அவ்வீட்டில் இருந்த சமையல் பாத்திரங்கள் மற்றும் காஸ் அடுப்பு பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது. மேற்படி காஸ் சிலிண்டர் புதிதாக விநியோகிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



# மின்னலால் இருவர் மயக்கம்

■ ஆர். ஜெயஸ்ரீராம்

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள எழுச்சி கிராமம், சுங்கான்கேனி, குளக்கோட்டன், கிண்ணையடி போன்ற கிராமங்களில் நேற்று முன்தினம் (03) இடம்பெற்ற மின்னல் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு-மயக்கமுற்ற நிலையில் இருவர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீட்டில் இருந்தவேளை, திடீரென ஏற்பட்ட மின்னல் தாக்கத்தால் தாங்கள் அதிர்ச்சிக்கு உள்ளானதாகவும் பின்னர் தங்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாது என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இவர்களது வளவினுள் உள்ள தென்னை மரங்களில் மின்னல் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் வீட்டில் இருந்த மின்சாரப் பொருட்கள், வீட்டு மின்னிணைப்புகள் என்பன சேதமுற்றுள்ளன.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் கனமழை தொடர்ச்சியாகப் பெய்து வருவதனால் காற்றுடன் கூடிய மழை வீழ்ச்சி காணப்படுகிறது. இதன்போது இடியுடன் கூடிய மின்னல் தாக்கமும் உள்ளது. மாவட்டத்தின் உள்ள பல்வேறு தாழ் நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

கல்முனை மாநகர சபை

# சாய்ந்தமருது சுயேட்சைக் குழுவின் புதிய உறுப்பினர் பதவியேற்பு

■ அஸ்லம் எஸ். மௌலானா

கல்முனை மாநகர சபையின் சாய்ந்தமருது சுயேட்சைக் குழு சார்பான புதிய உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள எஸ். மௌபியா, தனது சத்தியப்பிரமாண பத்திரத்தை மாநகர சபை மேயர் ஏ.எம். றகீபிடம் நேற்று (04) கையளித்து, உறுப்பினர் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார்.



மேயர் றகீபின் செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாநகர சபையின் உப தலைவர் றஹ்மத் மன்சூர், மாநகர சபை உறுப்பினர்களான ஹென்றி மகேந்திரன், ரி. ராஜரட்ணம், மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் அர்ஷாத் காரியப்பர், சபைச் செயலாளர் ஏ.எம். ஆரிப் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இவரது சத்தியப்பிரமாணப் பத்திரத்தை கையேற்றுக் கொண்ட மேயர் றகீப், இவரை இம்மாதத்திற்கான பொதுச் சபை அமர்வுக்கு அழைப்பு விடுக்க நடவடிக்கை எடுக்குமாறு சபையின் செயலாளருக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

கல்முனை மாநகர சபையின் சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசல் சார்பான சுயேட்சைக் குழுவின் 19ஆம் வட்டார உறுப்பினராக பதவி வகித்து வந்த முஹர்றம் பஸ்மீர், கடந்த 2020ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து அப்பதவி வெற்றிடமாக இருந்து வந்த நிலையில், குறித்த சுயேட்சைக் குழுவின் மேலதிக பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த மேற்படி எஸ். மௌபியா, இச்சுயேட்சைக் குழுவின் பரிந்துரைக்கமைவாக தேர்தல்கள் திணைக்களத்தின் கல்முனை மாநகர சபைக்கான தெரிவத்தாட்சி அதிகாரியால் புதிய உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உதவித்திட்டங்கள் வழங்கிவைப்பு

■ க. அகரன்

வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம் ஆகியோரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில், வவுனியா மாவட்டத்தை சேர்ந்த பொது அமைப்புகள், விளையாட்டு கழகங்களுக்கு உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.



வவுனியா பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பிரிவின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில், முதன்மை அதிதியாக கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் உதவிப்பொருட்களை கையளித்தார்.

நிகழ்வில், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், இலங்கை உதைப்பந்தாட்ட சங்கத்தின் உபபொருளாளர் அ.நாகராஜன், விளையாட்டுக்கழகத்தினர், திட்டமிடல் பிரிவின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# இந்திய மீனவர்கள் 13 பேரின் விளக்கமறியல் நீடிப்பு

■ செந்தூரன் பிரதீபன்

இந்திய மீனவர்கள் 13 பேரின் விளக்கமறியல் எதிர்வரும் 18ஆம் திகதி வரையிலும் நீடித்த ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் ஜெ.கஜநிதிபாலன், மீனவர்களிடம் வாக்குமூலம் பெறுவதற்கு, கடற்தொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகளுக்கு , நேற்று (4) அனுமதியளித்தார்.

இலங்கை கடற்பரப்புக்குள் டிசெம்பர் 21 ஆம் திகதி நுழைந்து மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் மேற்படி 13 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து இரண்டு படகுகளும் கைப்பற்றப்பட்டன.

மூங்கிலாறு சிறுமியின் மரணம்

# ஐவருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் மூங்கிலாறு கிராமத்தை சேர்ந்த 13 வயதான சிறுமி யோகராசா நிதர்சனாவின் மரணம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஐந்து பேரினதும் விளக்கமறியல் எதிர்வரும் 18 ஆம் திகதி வரையிலும் நீடிக்கப்பட்டுள்ளது



நேற்று (04) வரையிலும் ஒத்திவைக்கப்பட்டிருந்த வழக்கு, நீதவான் நீதிமன்றில் நீதிபதி ரி. சரவணராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்த நிதர்சனா, அவரது வீட்டிலிருந்து சுமார் 400 மீற்றர் தொலைவில், கொலை செய்யப்பட்டிருந்த நிலையில், 18 ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

தனது வீட்டிலிருந்து அக்காவின் வீட்டுக்கு செல்வதாகக் கூறிவிட்டு வீட்டிலிருந்து 13 ஆம் திகதியன்று புறப்பட்ட நிதர்சனா, பின்னர் காணாமற்போய்விட்டாரென அவரது குடும்ப உறுப்பினர்கள், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் 15 ஆம் திகதி முறைப்பாடு பதிவு செய்திருந்தனர் .

ஆனால், இக்கதைகள் அனைத்தும் உருவாக்கப்பட்டதாக ஆரம்பக் கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்திருந்ததை அடுத்து ஐவரும் கைது செய்யப்பட்டனர். இரண்டு மாத கர்ப்பிணியான சிறுமிக்கு கரு கலைப்பு செய்ய முற்பட்டபோதே, அச்சிறுமி உயிரிழந்துள்ளார்.

# விக்கிரகங்கள் திருட்டு; சிப்பாய் கைது

■ எம்.றொனாந்த்

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் இராணுவ மற்றும் கடற்படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள இந்து கோவில்களில் விக்கிரகங்கள் திருடிய குற்றச்சாட்டில் இராணுவச் சிப்பாய், இராணுவப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். திங்கட்கிழமை (03) கைதுசெய்யப்பட்ட சிப்பாய், தெல்லிப்பழை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயங்களில், தெல்லிப்பழை, காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளிலுள்ள இந்து கோவில்களில் டிசெம்பர் 9ஆம் திகதிக்கும் 23ஆம் திகதிக்கும் இடையே விக்கிரகங்கள் திருடப்பட்டன. விக்கிரகங்கள் திருட்டு சம்பவம் தொடர்பில், காங்கேசன்துறை நல்லிணக்கபுரத்தைச் சேர்ந்தவர் (வயது 34) முதலில் கைது செய்யப்பட்டார். அவரது வாக்குமூலத்தின் பிரகாரம், கொழும்பில் 20க்கு மேற்பட்ட விக்கிரகங்கள் கைப்பற்றப்பட்டன. எனினும், வர்த்தகர்கள் தலைமறைவாகிவிட்டனர். மேலதிக விசாரணைகளின் போதே சிப்பாய் கைது செய்யப்பட்டார்.



கோதுமை நிவாரணத்தை

# சாத்தியமாக்கவும்

## வடிவேல் சுரேஸ் எம்.பி வேண்டுகோள்

நிதி அமைச்சரால் முன்மொழியப்பட்டுள்ள பெருந்தோட்ட பகுதிகளுக்கான கோதுமை மா சலுகை, நீரின் மேல் எழுதப்பட்ட வாசகம் போல் அமையாமல் நடைமுறையில் சாத்தியப்படல் வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (04) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்ட போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றத்தால் பெருந்தோட்ட மலையக மக்களே அதிகளவில் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். குறிப்பாக கோதுமை மா விலை ஏற்றம் பெருந்தோட்ட மலையக மக்களைப் பொறுத்தவரை ஒரு பேரிடியாகும்.

பெருந்தோட்ட மலையக மக்களின் வாழ்வாதார செலவு, அவர்களுக்கு கிடைக்கப்பெறும் ஊதியம் என்பவற்றைக் கருத்தில் கொள்ளும்போது, வரவுக்கு மிஞ்சிய செலவே அங்கு காணப்படுகின்றது.

ஆகவே, அவர்களுக்கு நிவாரணம் அடிப்படையில் சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்பது என்னுடைய நிலைப்பாடாகும். இது ஆரம்பம் முதலே காணப்பட்டது என தெரிவித்த அவர், இந்தச் சூழ்நிலையில் நிதி அமைச்சரால் முன்மொழியப்பட்டுள்ள கோதுமை மா சலுகை வரவேற்கத்தக்கது. இருப்பினும் அது கட்டாயமாக நடைமுறையில் சாத்தியப்பட வேண்டும் என்றார்.



புதையல் தோண்டிய நால்வர்

## மாத்தளையில் கைது

■ மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை, பலாபத்வல, கிரிகல்பொத்த பிரதேசத்திலுள்ள இடமொன்றில் புதையல் தோண்டும் நோக்கில், அகழ்வுகளை முன்னெடுத்த, பெண்ணொருவர் உட்பட நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பெண்ணும் மற்றொரு நபரும் பண்டாரவளை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், ஏனைய இருவரும் மாத்தளையைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இடத்தில் பல்வேறு பூஜை வழிபாடுகளை சந்தேகநபர்கள் நால்வரும் முன்னெடுத்துள்ளதாகவும் சம்பந்தப்பட்ட இடத்தில் புதையல் இருப்பதாக வெளியான தகவல்களையடுத்தே, சந்தேகநபர்கள் நால்வரும் அங்கு அகழ்வு பணிகளில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை மாத்தளை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உடன்பிறந்த சகோதரனால்

## 11 வயது சிறுமி துஷ்பிரயோகம்

■ என்.ஆராச்சி

தெரணியகல பிரதேசத்தில் 11 வயது சிறுமியொருவர், அவரது உடன்பிறந்த 15 வயது சகோதரனால் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

இந்த மாதம் 2ஆம் திகதி வீட்டில் யாரும் இல்லாததைப் பயன்படுத்திக்கொண்ட குறித்த சிறுவன், தனது சகோதரியை துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கியுள்ளான்.

இந்த விடயத்தை அறிந்துக்கொண்ட உறவினரான அயல்வீட்டுப் பெண்ணொருவர், சிறுமியை அவிசாவளை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றதுடன், இதன்போது சிறுமி துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன் அன்றைய தினமே சிறுமியின் சகோதரன், தெரணியகல பொலிஸ் நிலையத்தின் சிறுவர் மற்றும் பெண்கள் அலுவலகப் பிரிவினரால் அவிசாவளை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது, சிறுமியை வைத்தியசாலையில் அனுமதிக்குமாறும், சிறுவனை இந்த மாதம் 24ஆம் திகதி வரை தந்தையின் பொறுப்பில் வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளதுடன், இது தொடர்பான வழக்கு இந்த மாதம் 24ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பண்டாரவளை, ஹட்டன்:

## சிலிண்டர் வரிசை



■ எம். செல்வராஜ், சுதத்.எச்.எம். ஹேவா

பண்டாரவளை நகரில் சமையல் எரிவாயு சிலிண்டரைக் கொள்வனவு செய்வதற்கு மக்கள் நேற்று (4) நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

இவ்வாறு காத்திருந்தவர்களுள் 20 பேருக்கு மாத்திரம் டோக்கன் இலக்கங்கள் வழங்கப்படுவதாக அறிவுறுத்தப்பட்ட நிலையில், மக்கள் தொடர்ந்து வரிசைகளில் காத்துக் கிடந்தனர்.

இதேவேளை, ஹட்டனிலும் நேற்று (4) அதிகாலை 5 மணிதொடக்கம் மக்கள் வரிசையில் காத்துக்கிடந்தனர்.

ஹட்டனில் நேற்று (04) உள்ள ஒரு சில வர்த்தக நிலையங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டன. இதனை கொள்வனவு செய்வதற்காக, வர்த்தக நிலைய உரிமையாளர்களும் மக்களும் முண்டியடித்து நீண்ட வரிசையில் நின்றதை காணக்கூடியதாக இருந்தது.

## தசாப்தவிழா...








ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட, பொகவந்தலாவ சென். மேரிஸ் கனிஷ்ட வித்தியாலயத்தின் தசாப்த விழா நேற்று (4) அனுஷ்டிக்கப்பட்டது. பாடசாலையின் அதிபர் மார்ஸல் ராஜநாயகம் தலைமையில், நடைபெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மத்திய மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளரும் ஹட்டன் கல்வி வலயத்தின் பணிப்பாளருமான ஆர்.ஏ.சத்தியேந்ரா கலந்து கொண்டார். இதன்போது மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல விடயங்கள் இடம்பெற்றன. (எஸ். சதீஸ்)

அக்கரபத்தனை சிலைகள் உடைப்பு சம்பவம்

## "முதலும் முடிவுமாக இருக்க வேண்டும்"

### இந்து குருமார் ஒன்றியம் கோரிக்கை

■ கே. சுந்தரலிங்கம்

அக்கரபத்தனை கோவில் சிலைகள் உடைப்பு சம்பவமானது, முதலும் முடிவுமாக இருக்க வேண்டுமென தெரிவித்த, மலையக இந்து குருமார் ஒன்றியத்தின் பொது செயலாளர் தேசகீர்த்தி சமூகஜோதி சிவஸ்ரீ வேலு சுரேஸ்வர் சர்மா, சிலைகளை உடைத்து இனங்களிடையே முறுகல் நிலையை ஏற்படுத்த இடமளிக்கக் கூடாது என்றார்.

அக்கரபத்தனை நகரில் அமைந்துள்ள சித்தி விநாயகர் கோவிலின், சிலைகள் இந்த மாதம் 2ஆம் திகதி இனந்தெரியாத விசமிகளால் உடைக்கப்பட்டமை தொடர்பில், நேற்றுமுன்தினம் (03) திகதி நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர்



இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், இந்தச் செயலை எவர் செய்திருந்தாலும் அதனை அனுமதிக்க முடியாது. ஆகவே, இந்தச் சிலைகள் உடைப்பானது, முதலும் முடிவுமாக இருக்க வேண்டும். ஏனென்றால், எமது மதத்தின் புனித சின்னங்களை உடைப்பது என்பது ஒரு மிருகத்தனமான செயல்.

ஆகவே, இதனை செய்தவர்கள் யாராக இருந்தாலும் பரவாயில்லை, அவர்களுக்கு எதிராக கோவில் நிர்வாகத்துடன் இணைந்து, சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நாங்கள் தயங்கப் போவதில்லை.

எனவே, இதனுடன் தொடர்புடையவர்களுக்கு சரியான தண்டனையைப் பெற்றுக்கொடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

டிக்கோயா, நோர்வூட் பகுதிகளில்

## சிறுத்தையால் மக்கள் அச்சம்

■ சுதத்.எச்.எம்.ஹேவா

டிக்கோயா மற்றும் நோர்வூட் ஆகிய பிரதேசங்களில் நடமாடும் சிறுத்தையால் அப்பிரதேச மக்கள் அச்சத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

குறித்த பிரதேசங்களில் வீடுகளில் வளர்க்கப்படும் கோழிகள், நாய்கள் என்பன திடீரென காணாமல் போவதாகவும், சிறுத்தையே இவற்றைக் கொண்டு செல்வதாகவும் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

மேலும் இரவு நேரங்களில் மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்கே இச்சிறுத்தை வருவதால், இரவு நேரங்களில் அவசர காரியங்களுக்கு வீட்டை விட்டு வெளியே வருவதற்கு மக்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

எனவே, குறித்த சிறுத்தையால் தமக்கு ஏதாவது அசம்பாவிதம் ஏற்படுவதற்கு முன்பாக, இதனை பிடித்துச் செல்லுமாறு வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மக்களுக்குப் பலன் கிடைக்காவிட்டால்

## எத்தனை வங்கிகள் திறந்தும் பயனில்லை

### இராமேஸ்வரன் எம்.பி தெரிவிப்பு

■ கே.சுந்தரலிங்கம்



மஸ்கெலியா பகுதியில் சமுர்த்தி வங்கி திறக்கப்பட வேண்டும் எனத் தானும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானும் கேட்டுக்கொண்டதற்கமைய, இந்த வங்கி திறக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். இராமேஸ்வரன், எத்தனை வங்கிகள் திறந்து வைத்தாலும் மக்களுக்கு அதன் சேவைகள் சென்றடையாவிட்டால் அதில் பயனில்லை என்றார்.

மஸ்கெலியா பகுதியில் சமுர்த்தி வங்கி ஒன்றை நேற்று (4) திறந்து வைத்து உரையாற்றும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

கடந்த காலங்களில் அரசியல் கட்சி பார்த்துத்தான் சமுர்த்தி கொடுப்பனவு பெற்றுக்கொடுக்கப்பட்டது. அதனால் கிடைக்க வேண்டிய எத்தனையோ பேருக்கு சமுர்த்தி கிடைக்க வில்லை.

ஆனால் நாங்கள் சமுர்த்தி பெற வேண்டியவர்களின் பட்டியலைத் தயாரிக்கும் போது, 23,000 பேருக்கு பெற்றுக்கொடுக்கவில்லை என்பதை தெரிந்துக்கொண்டோம். அதன் அடிப்படையில் தான் 5,000 ரூபாயை கொரோனா காலத்தில் பெற்றுக்கொடுத்தோம்.

நாங்கள் ஏழை மக்களுக்கு உதவிகள் செய்யும் போது கட்சி பார்ப்பதில்லை. தொடர்ந்து சமுர்த்தி பயனாளர்களாக மக்கள் இருக்காமல், இந்த நிதியைக் கொண்டு சுய தொழில் செய்து முன்னேற வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் தான் கடந்த வருடமும் இந்த வருடமும் பாரிய அளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார்.

## புனரமைக்கப்பட்டு வரும் கோவில்களுக்கு நிதி ஒதுக்கீடு

ஊவா மாகாணத்தில் புனரமைக்கப்பட்டு வரும் கோவில்களுக்கு, பெருந்தோட்டங்களுக்கான பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமானால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய, பண்டாரவளை, ஹப்புத்தளை, பள்ளெக்கெட்டுவ, வெலிமடை, ஊவாபரணகம ஆகிய இடங்களில் புனரமைக்கப்பட்டு வரும் கோவில்களுக்கு, கோவில் நிர்வாக குழுவினரிடம் புனரமைப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கான நிதி ஒதுக்கீட்டினை இ.தொ.காவின் உப தலைவரும்,பெருந்தோட்டங்களுக்கான பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் வழங்கி வைத்தார்.



மேலும் கட்டுமானப் பணியை விரைவுபடுத்த கோவில் நிர்வாகத்தினருடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

எதிர்வரும் காலங்களில் கட்டுமானப் பணிகளுக்காக மேலதிக நிதி வழங்குவதாக, இக்கலந்துரையாடலின் போது செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

# தனியார் துறையினரை ஓரங்கட்டிய நிவாரணப் பொதி

ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதத்தில் ஆட்சியிலிருக்கும் அரசாங்கம், அடுத்தாண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும். நெருக்கடியான காலங்களில், இடைக்கால கணக்கறிக்கையை சமர்ப்பித்து, புதிய வருடத்துக்கான நிதியை பெற்றுக்கொள்ளும். இது பெரும்பாலும் தேர்தல்கள் நடைபெறும் போது கடைப்பிடிக்கப்படும் முறைமையாகும்.

அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் சிறப்பு ஏற்பாடுகளின் அடிப்படையிலேயே பாராளுமன்றத்தின் அங்கிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக, இடைக்கால கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்படும். அதில், அரச செலவுகளைத் தவிர, வேறெந்த நிவாரணங்களையும் எதிர்பார்க்க முடியாது.

தேர்தல் காலமெனில், மக்களின் மனங்களைக் கவரும் வாக்குறுதிகளை அள்ளிவீசி, நிவாரணப்பொதிகளை வழங்கி, வாக்குகள் பெற்றுக்கொள்ளப்படும். இவையெல்லாம் அரசியல் சூட்சுமங்களில் சிலவாகும். 2022ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில், நிவாரணங்களோ, சம்பள அதிகரிப்புகளோ இல்லை.

ஆனால், பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட மறுமாதமே, பொருட்களின் விலைகளும் சேவைகளின் கட்டணங்களும் கிடுகிடுவென அதிகரித்தன. ஒவ்வொரு நாளும், ஏதோவொரு பொருளின் விலை அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இன்று (05) முதல் பஸ் கட்டணங்களும் அதிகரிக்கின்றன.

இந்நிலையில்தான், நிதியமைச்சர் பசில் ராஜபக்‌ஷ, இம்மாதம் முதல் நடைமுறைக்கு வரும்வகையில், 'நிவாரணப் பொதி'யை அறிவித்துள்ளார். அதில், அரச ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் பெறுவோருக்கும் அங்கவீனமான படையினருக்கும் மாதாந்தம் ஐயாயிரம் ரூபாய் வழங்கப்படவுள்ளது.

சமுர்த்தி பெறுவோருக்கு ஆயிரம் ரூபாயும் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு கிலோ கிராம் கோதுமை மா 80 ரூபாய்க்கும், (மாதத்துக்கு 15 கிலோ கிராம் மட்டும்) ஒரு கிலோ கிராம் நெல்லுக்கு 72 ரூபாய் நிவாரண விலையும் வீட்டுத்தோட்டங்கள் செய்வோருக்கு உர நிவாரணமும் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பொருட்களின் விலைகளும் சேவைகளின் கட்டணங்களும் அதிகரிக்கும் போது, நாட்டின் மூலை முடுக்குகளில் வாழும் அத்தனை பேரின் மீதும், அவை தாக்கத்தை செலுத்தும். ஆனால், நிதியமைச்சரின் நிவாரணப் பொதி, ஒரு சிலரின் மனங்களைக் குளிர்விப்பதாகவே அமைந்திருக்கின்றது. ஒட்டுமொத்த மக்களும், குறிப்பாக தனியார் துறையினர் மீது முழுவீச்சில் கரிசனை காட்டப்படவில்லை.

நொந்துபோய் வாழுவோருக்கு இந்த நிவாரணப் பொதி, ஓரளவுக்கு நிவாரணமளிப்பதாய் அமைந்தாலும், அதற்கான நிபந்தனைகளால், சிலருக்கு நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். உதாரணமாக, வீட்டுத்தோட்டத்துக்கான நிவாரணத்தை பெறுவதற்கான நிபந்தனையை குறிப்பிடலாம்.

அரசாங்கத்தின் மீதான விமர்சனங்களின் செறிவைக் குறைப்பதற்கான தந்திரமாகவும் துருப்புச்சீட்டாகவும் இந்த நிவாரணப் பொதியைப் பயன்படுத்தியிருக்கலாம். ஆனால், அடுத்தடுத்த மாதங்களில் ஏதாவது விலை அதிகரிக்கப்பட்டால், நிவாரணம் நிர்வாணமாகிவிடும்.

ஒரு சில தரப்பினரை மட்டுமே ஓரளவுக்கு திருப்தியுறச் செய்திருக்கும் இந்த நிவாரணப் பொதி யோசனைக்கு அப்பாற்சென்று, வீழ்ந்து கிடக்கும், அல்லது தட்டுத்தடுமாறி ஓடிக்கொண்டிருக்கும் தொழிற்றுறைகளுக்கு உயிரோட்டம் கொடுப்பதற்கு முயற்சி செய்திருந்தால், அரச, தனியார் துறையினர் எனும் பேதமின்றி, ஒட்டுமொத்த மக்களுக்கும் ஏதாவது ஒருவகையில் நிவாரணமும் விடிவும் கிடைத்திருக்கும்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

எவை எமக்குப் பிரதானமானவையாகவும் பிடித்தமானவையாகவும் தோன்றி, அவற்றைப் பெற்றதும், அவைகளே எமக்கு பிரச்சினைகளாகி விடுவதுண்டு.

எங்களுக்குப் பிடித்தவை, பிறருக்குப் பிடிப்பதில்லை. அதுபோலவே பிறரின் விருப்பங்கள் எமக்கு ஒத்துப்போகாமலும் இருப்பதுண்டு.

எவை எமக்கு உகந்தவை என்று எம்மால் பூரணமாக அறிய முடிவதும் இல்லை. துன்பம் என மனிதன் கருதும் விடயங்கள், அவை எமக்கான பாடங்கள் என விளங்கிக் கொள்ளுதலும் தெளிவு அடைதலும் அவசியமாகும்.

சில விடயங்கள், மனிதனை இலகுவில் ஆட்கொண்டு விடுகின்றன. இவை சகஜமானவை. எதையும் உடனடியாக முடிவெடுப்பது தவறானது.

வேதனைகளைத் தொடர்ந்து எண்ணுவதும் இன்பங்கள் நிலையானவை என இறுமாப்பூ கொள்வதும் மானுடசுபாவம். ஆனால், நம்பிக்கை இல்லாமல் வாழ்க்கையைச் சிருஷ்டிக்க இயலாது. தனக்குப் பிடிக்காதவர்களின் துன்பங்களைப் பார்த்து, ரசிப்பவர்கள் கொடுமையானவர்கள். தவறுகளை உணராதவன் துன்பங்களை வலிந்து வரவேற்பவன் ஆவான்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்



எம்.எஸ்.எம். ஐயூப்

# 'கொரோனா' கற்றுத் தந்த பாடங்கள்

நாடு பெரும் பொருளாதார, அரசியல் நெருக்கடியை எதிர்நோக்கியிருப்பது ஒன்றும் இரகசியம் அல்ல. விலைவாசி வானளாவ உயர்ந்துள்ளது. பொருட்களின் உற்பத்தி - இறக்குமதி ஆகியன வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் விலைவாசி மேலும் உயரும் நிலையையே காணமுடிகிறது.

நிதி அமைச்சர் பசில் ராஜபக்‌ஷ, திங்கட்கிழமை (03/01) நாட்டு மக்களுக்கு பல சலுகைகளை அறிவித்தார். அரச ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் பெறுவோருக்கும் மாதாந்தம் 5,000 ரூபாய் வீதம் கொடுப்பனவாக வழங்குவதாகவும் சமுர்த்தி உதவி பெறுவோரின் மாதாந்தக் கொடுப்பனவை 1,000 ரூபாயால் அதிகரிப்பதாகவும், தோட்டப்புற குடும்பங்களுக்கு 80 ரூபாய் வீதம் 15 கிலோ கிராம் மா மாதமொன்றுக்கு வழங்குவதாகவும் அத்தியாவசிய உணவு மற்றும் மருந்து வகைகளின் தீர்வை நீக்கப்படும் என்றும் கூறினார்.

2021ஆம் ஆண்டில், மே மாத சம்பளத்தை அரசாங்கத்துக்கு நன்கொடையாக வழங்குமாறு, ஜனாதிபதியின் அப்போதைய செயலாளர் பீ.பி.ஜயசுந்தர, அரச ஊழியர்களிடம் கேட்டு இருந்தார். அதன் பின்னர், அரசாங்கத்தின் வருமானம் குறைந்து வந்ததேயல்லாது அதிகரிக்கவில்லை.

அவ்வாறாயின், இந்தச் சலுகைகளை வழங்க, அரசாங்கம் எவ்வாறு பணத்தைச் சம்பாதித்தது? இந்தக் கால கட்டத்தில் அரசாங்கம் பெருந்தொகையான பண நோட்டுகளை அச்சடித்தது. அந்தப் பணத்தைத் தான், இவ்வாறு சலுகைகளாக அரசாங்கம், மக்களுக்கு வழங்கப் போவதாக எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. இது, விலைவாசியை மேலும் அதிகரிக்கச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

நாட்டில் உணவு உற்பத்தி, மிக மோசமாகவே பாதிக்கப்பட்டுள்ளது. பசளைப் பிரச்சினையால் பெரும் போக உணவு உற்பத்தியும் பாரியளவில் குறையும் என்றே எதிர்பார்க்க வேண்டியுள்ளது. இதன் காரணமாக, உணவு வகைகள் இறக்குமதி செய்யவேண்டிய நிலை உருவாகி இருக்கின்ற போதிலும், அதற்காகவாவது நாட்டில் வெளிநாட்டு செலாவணி இல்லை. தேசிய உணவு உற்பத்திக்காக பசளை இறக்குமதி செய்யவும் வேண்டும்.

தற்போது வெளிநாட்டு கடன்களை அடைப்பதற்கும் பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் நாட்டில் சுமார் ஒன்றரை பில்லியன் டொலரே உள்ளதாக கூறப்படுகிறது. சீனாவிடம் இருந்து பெற்ற புதிய கடன் காரணமாக, நாட்டின் வெளிநாட்டு செலாவணித் தொகை மூன்று பில்லியன் டொலராக அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி கடந்த வாரம் அறிவித்த போதிலும், அந்தத் தொகை சீன நாணயத்தில் கிடைத்துள்ளது என்றும் அதன் மூலம் டொலர் கடன்களை அடைக்கவோ, சீனா அல்லாத நாடுகளிடம் இருந்து பொருட்களை கொள்வனவு செய்யவோ முடியாது எனவும் தெரிய வருகிறது.

அரசாங்கம் இரசாயன உரத்தை இறக்குமதி செய்வதை, கடந்த மே மாதம் தடை செய்ததால் வெளிநாட்டு செலாவணியை சம்பாதிக்கும் தேயிலை போன்ற ஏற்றுமதி பயிர்களும் பாதிக்கப்பட்டுள்ளன. அதனால், அத்துறையின் மூலம் கிடைக்கக்கூடிய வெளிநாட்டு செலாவணியும் மேலும் குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நாட்டின் வெளிநாட்டு செலாவணி நெருக்கடிக்கு, தற்போதைய கோட்டாபய ராஜபக்‌ஷ அரசாங்கம் மட்டும் தான் காரணம் அல்ல. இதுவரை நாட்டை ஆட்சி புரிந்த தலைவர்களின் மோசமான பொருளாதார கொள்கைகளும் கொவிட்-19 நோயின் தாக்கமும் இந்த நெருக்கடிக்கான ஏனைய காரணங்களாகும். கோட்டாபய அரசாங்கத்தின் மோசமான நிதி நிர்வாகம் இந்த நெருக்கடியை மேலும் தீவிரமாக்கியது.

கொவிட்-19 நோயின் காரணமாக பல நாடுகளில் தொழில் புரிந்த இலங்கையர்கள் நாடு திரும்ப முற்பட்ட போது, அவர்களுக்கு உதவ அரசாங்கம் தயக்கம் காட்டியது. நாடு திரும்பியவர்களைச் சுரண்ட காத்துக் கொண்டு இருந்த ஹோட்டல்காரர்களுக்கு அரசாங்கத்தின் அனுசரணையும் கிடைத்தது. இவை போன்ற காரணங்களால், நாடு திரும்பியவர்கள் மீண்டும் வெளிநாட்டுத் தொழில்களுக்குப் போகத் தயங்குவதை புரிந்து கொள்ளலாம். இதுவும் தற்போதைய வெளிநாட்டு செலாவணிப் பிரச்சினைக்கு சிறிதளவேனும் காரணமாகியது.

தடுப்பூசியைப் பாவித்து, கொரோனா வைரஸ் பரவலை, அரசாங்கம் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது. அதேபோல், கொவிட்-19 பெருந்தோற்று நோய், வெளிநாட்டு செலாவணி கையிருப்பை மோசமாகப் பாதித்தது என்பதும் உண்மையே. ஆனால், அரசாங்கம் தூரநோக்கோடு செயற்பட்டு இருந்தால், கொவிட்-19 விடயத்தில் தற்போதைய நிலைமையை பல மாதங்களுக்கு முன்னரே அடைந்திருக்கலாம்.

முதலாவது, கொவிட்-19 அலையின் இறுதியில் அரசாங்கம் எச்சரிக்கையாக இருக்கவில்லை. ஆங்காங்கே மேற்கொள்ளப்படும் பி.சி. ஆர் பரிசோதனைகளை அதிகரிக்க வேண்டும் என சுகாதார அதிகாரிகள் வழங்கிய அறிவுறுத்தல்களை அரசாங்கம் புறக்கணித்தது.

அந்த நிலையிலேயே, திடீரென மினுவாங்கொடையில் 'பிரண்டிக்ஸ்' ஆடை தொழிற்சாலையில் ஆயிரத்துக்கு அதிகமான கொவிட் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். அங்கிருந்து பேலியகொட மீன் சந்தைக்கும் அங்கிருந்து முழு நாட்டுக்கும் நோய் பரவியிருந்தது. அதுவே, இரண்டாவது கொவிட் அலையின் ஆரம்பமாகியது. நூற்றுக் கணக்கில், ஆயிரக் கணக்கில் தொழிலாளர்கள் கடமையாற்றும் இடங்களில் ஆங்காங்கே பரிசோதனைகளை மேற்கொண்டு இருந்தால் இந்த நிலையைத் தடுத்திருக்கலாம்.

அதேபோல், கடந்த வருடம் சித்திரைப் புத்தாண்டு காலத்தில் பயணக் கட்டுப்பாடுகளை விதிக்குமாறு சுகாதார பரிசோதகர்கள் கூறினர். அரசாங்கம் அதனையும் பொருட்படுத்தவில்லை. பண்டிகை முடிவடைந்து இரண்டு வாரங்களில் தலைதூக்கிய மிகவும் மோசமான மூன்றாவது கொவிட் அலைக்கு அதுவே காரணமாகியது.

இது போன்ற, தூரநோக்கற்ற நடவடிக்கைகளால் கொவிட் நோய் மிக மோசமாகப் பரவி, நாடு பல முறை முடக்கபபட்டது. அது ஏற்றுமதி தொழில்கள் உள்ளிட்ட சகல தொழிற்றுறைகளையும் உல்லாசப் பிரயாணத்துறையையும் பாதித்தது. அத்துறைகள் பாதிக்கப்பட்ட போது, வெளிநாட்டுப் பணம் வரும் வழிகள் தானாகவே அடைப்படுகின்றன.

இலங்கை போன்ற நாடுகளுக்கு, கொவிட் நோய் வழங்கிய மிகவும் பெறுமதியான பாடம் அபிவிருத்தி என்பது, கட்டுமானங்களும் வீதிகளும் அல்ல என்பதாகும். இதுவரை நாட்டை ஆட்சி செய்த தலைவர்கள் அனைவருமே, தாம் நாட்டை அபிவிருத்தி செய்ததாக மார்தட்டிக் கொண்டனர். குறிப்பாக, மஹிந்த ராஜபக்‌ஷவின் ஆட்சிக் காலத்தில் வீதிகள், விமான நிலையங்கள், துறைமுகங்கள் எனப் பெரும் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால், நாட்டின் பொருளாதாரமானது வெளிநாடுகளில் தான் தங்கியிருக்கிறது என்பது கொவிட் காட்டித் தந்தது. வெளிநாட்டுத் தொழில்களும் உல்லாசப் பிரயாணிகளும் ஆடை தொழிற்சாலைகளுமே எமது பிரதான வருமானமாக இருக்கிறது. விவசாயம் தவிர, தேசிய உற்பத்தி என்று கூறுவதற்கு எதுவுமே இல்லை.

ஹம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தள விமான நிலையம் நல்ல திட்டங்களாயினும் அளவுக்கு அதிகமாக சீனாவைச் சார்ந்த இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையும் மனித உரிமை, நல்லாட்சி, ஜனநாயகம் போன்ற விடயங்களில் மஹிந்தவின் அரசாங்கம் மேற்குலகோடு முட்டி மோதியதன் காரணமாகவும் மேற்குலகம் அத்திட்டங்களை புறக்கணிக்கும் நிலை உருவாகியது.

கொரோனாவுக்கு முன்னர் வெளிநாட்டு வருமானம் அன்றாட செலவுக்கு போதுமானதாகவே இருந்துள்ளது. செலாவணி கையிருப்பு என்று கூறும் அளவுக்கு எதுவும் பெரிதாக நாட்டில் இருக்கவில்லை. வெளிநாட்டு வருமானம் அத்தியாவசியமானது தான். ஆனால், அதில் மட்டும் தங்கியிருப்பதன் விளைவையே இலங்கை இப்போது அனுபவிக்கிறது. அதிவேக வீதிகளும் பாரிய கட்டடங்களும் தேவையாயினும் கைத்தொழில்களோடு பின்னிப் பிணைக்கப்படாத வீதிகளும் கட்டடங்களும் உண்மையான அபிவிருத்தி அல்ல என்பதையும் கொவிட் தொற்று கற்றுத் தந்தது.

அபிவிருத்தி என்பது என்ன என்பதை நாட்டுத் தலைவர்கள் புரிந்து கொள்ளவில்லை; அல்லது, உண்மையான அபிவிருத்தியைப் பார்க்கிலும் குறுகிய கால நடவடிக்கைகள் மூலம் அரசியல் இலாபம் அடைவதும் பாரியளவில் பணம் சம்பாதிப்பதுமே அவர்களது நோக்கமாகியது.

ஒரு காலத்தில் இலங்கையில் சீமெந்து, ஓட்டுப்பலகை, சீனி, புடவை, டயர், கடதாசி, உருக்கு, இரசாயனப் பொருட்கள் (பரந்தன் இரசாயன தொழிற்சாலை) மட்டுமன்றி வானொலிப் பெட்டிகளும் தயாரிக்கப்பட்டன. இந்தத் தொழிற்சாலைகளில் பெரும்பாலானவை அரச உடைமையாக இருந்தும் ஆட்சியாளர்கள் அவற்றை காலத்துக்கேற்ப நவீனமயப்படுத்தாமையாலும் ஊழலின் காரணமாகவும் அவை விற்கப்பட்டு, இல்லாதொழிக்கப்பட்டன.

வெளிநாட்டுப் பொருட்களின்றி ஒரு நாடு பூரணமாக தன்னிறைவு அடைவது என்பது சாத்தியமல்ல. ஆனால், கூடிய வரை உள்நாட்டு உற்பத்திகளைப் பெருக்குவதன் மூலமே வெளிநாட்டு செலாவணியை சம்பாதிப்பதோடு போர்கள், பொருளாதார தடைகள், தொற்று நோய்கள் ஆகியவற்றையும் எதிர்கொள்ள முடியும். உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்குவோம் என ஆட்சிக்கு வரும் தலைவர்கள் கூறி வந்த போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இந்த விடயத்தில் கியூபா, வட கொரியா, ஈரான் போன்ற நாடுகளிடம் இலங்கை பல விடயங்களை கற்றுக் கொள்ளலாம். அந்நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கையை இலங்கை ஏற்கத் தேவையில்லை. ஆனால், அந்நாடுகள் பல தசாப்தங்களாக சர்வதேச பொருளாதார தடைகளை எவ்வாறு எதிர் கொள்கின்றன என்பதே முக்கியமான விடயமாகும். அவை பொருளாதாரத்தை பன்முகப்படுத்தின. முடிந்த அனைத்தையும் உள்நாட்டில் உற்பத்தி செய்கின்றன.

குறிப்பாக, கியூபாவும் ஈரானும் கல்வியை முன்னேற்றி, நாட்டில் விஞ்ஞானிகள், மருத்துவர்கள் போன்ற தொழில்சார் நிபுணர்களின் எண்ணிக்கையை அதிகரித்தன. ஈரானில் பத்து இலட்சத்துக்கு அதிகமான மருத்துவர்கள் இருக்கின்றனர். முப்பதாண்டு கால பொருளாதார தடைகளுக்கு மத்தியில் இன்று ஈரான் அமெரிக்காவுக்கும் இராணுவ ரீதியாக சவால் விடுக்கிறது. ஈரானும் கியூபாவும் கொவிட்-19 நோய்க்கு எதிராகத் தாமே தயாரித்த தடுப்பூசிகளையே செலுத்துகின்றன.

அந்நாடுகள் சுவர்க்க பூங்காக்களல்ல தான். ஆனால், போர்கள், உலகளாவிய தொற்று நோய்கள், பொருளாதார தடைகள் போன்றவற்றின் மத்தியிலும் தன்மானத்துடன் வாழ்வது எவ்வாறு என்பதற்கு, அந்நாடுகள் உதாரணங்களாகும்.

## கடிதங்கள்



சாய்ந்தமருது பெண்கள் சந்தை:

### வெள்ளத்தால் பாதிப்பு; வியாபாரிகள் கவலை

சாய்ந்தமருது பெண்கள் சந்தை, மழை வெள்ளத்தால் தினமும் பாதிக்கப்பட்டு வருவதாக வியாபாரிகளும் பொதுமக்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட சாய்ந்தமருது பெண்கள் சந்தையில் மீன், இறைச்சி, மரக்கறி வகைகள் தினமும் விற்பனை செய்யப்படுகின்றன. பல்லாயிரக்கணக்கான மக்கள் இச்சந்தையை நாடி, தத்தமது தேவைகளைப் பூர்த்தி செய்கின்றனர்.

தற்போது அப்பகுதியில் பெய்கின்ற அடைமழை காரணமாக, இச்சந்தையில் ஒழுக்கு ஏற்பட்டுள்ளதுடன், சந்தைக்குள்ளும் மழைநீர் தேங்கி நிற்கும் அவலநிலை தொடர்வதாக பாதிக்கப்பட்ட வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

எதுவிதமான அடிப்படை வசதிகளும் இல்லாமையால், மழைக்காலங்களில் தமது வியாபாரங்களை செய்யமுடியாது, பொருட்களை முடி வைத்துக்கொண்டு இருக்கும் பரிதாப நிலையையும் வியாபாரிகள் விவரிக்கின்றார்கள். எனவே இதற்கான தீர்வினை உரிய தரப்பினர் மேற்கொள்ள வேண்டும் என வியாபாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பாறுக் ஷிஹான்

ஹைதராபாத்

# சீன இராணுவத்துக்கு இனிப்புகளை வழங்கும் இந்திய இராணுவம்





“பிரதமர் மோடி விமர்சனங்களை எதிர்கொள்வதற்கு தயாராக இல்லை; அவர் புகழ்ச்சியை கேட்கவே விரும்புகிறார்” என்று அகில இந்திய மஜ்லிஸ்-இ இத்தேஹாதுல் முஸ்லிம் (ஏ.ஐ.எம்.ஐ.எம்) கட்சியின் தலைவர் அசாசுதீன் ஒவைசி சாடியுள்ளார்.

மேகாலயா மாநில ஆளுநர் சத்யபால் மாலிக் அளித்த பேட்டியில், “பிரதமர் மோடியைச் சந்தித்துப் பேசியபோது, விவசாயிகள் பிரச்சினைகளைப் பற்றி ஆலோசித்தேன்; இறுதியில் மோடியுடனான சந்திப்பு சண்டையில்தான் முடிந்தது” எனத் தெரிவித்தார். மேகாலயா ஆளுநர் சத்யபால் மாலிக் பேசியது குறித்து ஏ.ஐ.எம்.ஐ.எம் கட்சியின் தலைவர் அசாசுதீன் ஒவைசி, ஹைதராபாத்தில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது: “சத்யபால் மாலிக் ஒரு மாநிலத்தின் ஆளுநராக இருக்கிறார். மத்திய அரசால் நியமிக்கப்பட்டவர். அரசியலமைப்புச் சட்ட பதவியில் இருக்கிறார். அவர் சொல்வதை நம்பாமல் இருக்க முடியாது. பிரதமர் மோடி, உண்மையைக் கேட்கத் தயாராக இல்லை என்று ஆளுநரே தெரிவிக்கிறார். விவசாயிகளின் போராட்டத்தில், உங்களால்தான் விவசாயிகள் உயிரிழந்தார்கள் என ஆளுநர் சத்யபால் கூறியபோது, மோடி கோபமடைந்துள்ளார்.

உண்மையை ஏற்றுக்கொள்ள பிரதமர் மோடி தயாராக இல்லை. இதன்மூலம் பிரதமர் மோடியின் ஆணவம் வெளிப்படுகிறது. சர்வாதிகாரி போல் செயற்படும் மோடி, புகழ்ச்சியையும் பாராட்டுகளையும் மட்டுமே கேட்க விரும்புகிறார்.

நம்முடைய எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் சீன இராணுவம் கட்டடங்களைக் கட்டி ஆக்கிரமித்து வருகிறது. எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சீன இராணுவம் ஆயுதங்களையும் இராணுவ வீரர்களையும் குவித்து வருகிறது. எல்லையில் புதிதாக கிராமங்களை சீன இராணுவம் உருவாக்கி வருகிறது. இதுதொடர்பாக வீடியோ காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வருகின்றன, எம்.பிக்கள் கடிதம் எழுதிவிட்டார்கள். ஆனால், நம் இராணுவம், சீன இராணுவத்துக்கு இனிப்புகளை வழங்கி வருகிறது” என்றார் ஒவைசி.





# அமைச்சரவை தீர்மானங்கள்...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற, இவ்வருடத்தின் முதலாவது அமைச்சரவை சந்திப்பின்போது, எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில:

## புரிந்துணர்வு ஒப்பந்தம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்துக்கும் சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனத்துக்கும் இடையில் 2017 ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி செய்துகொள்ளப்பட்ட பரஸ்பர ஒத்துழைப்புக்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்த காலத்தை மேலும் 03 வருடங்களுக்கு நீடித்து புதிய புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடுவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

அரிசி தொடர்பான அறிவியல் மற்றும் அதுசார்ந்த கற்கைத் துறைகளுக்கு ஏற்புடைய திறந்த மற்றும் தொலைதூரக் கற்றல் முறைக்குப் பொருத்தமான வகையிலான பாடநெறிகளை விருத்தி செய்தல், நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்தல், ஒன்றிணைந்த ஆய்வுக் கருத்திட்டங்களை நடாத்துதல் மற்றும் கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்துதல், ஆராய்ச்சிகள், வெளியீடுகள் மற்றும் ஏனைய தகவல்களைப் பரிமாற்றிக் கொள்ளல் போன்ற செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டதாக இவ்வொப்பந்தம் அமையும்.

## இ.போ.சவுக்கு 500 பஸ்கள்

இந்தியாவின் கடனுதவித் திட்டத்தின் கீழ், இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 32 - 35 ஆசனங்கள் கொண்ட 500 பஸ்களை கொள்வனவு செய்வதற்காக 2020 ஜனவரி மாதம் 08 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் கிடைத்துள்ளது.

அதற்கமைய, பஸ்களை கொள்வனவு செய்வதற்காக முற்கூட்டிய தகைமைகளைக் கொண்ட 03 நிறுவனங்களிடமிருந்து போட்டி விலைமுறிகள் கோரப்பட்டிருந்தன. நிரந்தர பெறுகைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கமைய 32 ஆசனங்களைக் கொண்ட 500 பஸ்களைக் கொள்வனவு செய்வதற்காக இந்தியாவின் அசோக் லேலண்ட் கம்பனிக்கு வழங்குவதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## மருந்து விநியோக பெறுகை

உயிராபத்து நோய்நிலைமைகளின் போது நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் ஹியூமன் இம்மியூனோக்குளோபின் 75,000 பிபீ 5-6 கிராம் மருந்துக் குப்பிகளைக் கொள்வனவு செய்வதற்காக சர்வதேச போட்டி விலைமுறிகள் கோரப்பட்டுள்ளன. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய குறித்த விலைமனுக்கோரல் இந்தியாவின் ரிலயன்ஸ் லயிஃப் சயன்ஸ் தனியார் கம்பனிக்கு வழங்குவதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## குப்பிகள் விநியோகத்துக்கான பெறுகை

பக்ரீறியாக்கள் மூலம் ஏற்படும் சுவாச நோய்த்தொற்றுக்கள் உள்ளிட்ட பல்வேறு தொற்றுக்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக மெரோபனம் (Meropenem) ஊசிமருந்துகள் 1 கிராம் கொண்ட 1,800,000 மருந்துக் குப்பிகளை கொள்வனவு செய்வதற்காக சர்வதேச போட்டி விலைமுறிகள் கோரப்பட்டுள்ளது.

அதற்கமைய 03 விலைமுறிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய மொத்த ஊசிமருந்துத் தேவைகளின் 25 சதவீதத்தை விநியோகிப்பதற்காக விவரமாகப் பதிலளித்துள்ள குறைந்த விலைமுறியான இந்தியாவின் வீனஸ் ரெமடீஸ் கம்பனிக்கு வழங்குவதற்கும் ஊசிமருந்தின் செயற்றிறன் தொடர்பான இறுதிப் பரிசோதனையின் பரிந்துரைகளின் அடிப்படையில் எஞ்சிய 75% வீதமான கொள்வனவை வழங்குவதற்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## பொலிஸூக்கு 750 ஜீப் வண்டிகள்

பொலிஸ் விசேட அதிரடிப்படைக்கு 150 ஜீப் வண்டிகள் உள்ளடங்கலாக இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கு 750 ஜீப் வண்டிகளை இந்தியாவின் கடனுதவித் திட்டத்தின் ( Indian Line of Credit ) கீழ் கொள்வனவு செய்வதற்காக 2020 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கியால் பரிந்துரைக்கப்பட்டுள்ள கம்பனிகளிடம் போட்டி விலைமுறி கோரப்பட்டுள்ளதுடன், அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய, குறித்த விலைமனுக்கோரல் இந்தியாவின் மஹேந்திரா மற்றும் மஹேந்திரா கம்பனிக்கு வழங்குவதற்காக அங்கிகாரமளிக்கப்பட்டுள்ளது.

## பெறுமதிசேர் வரிச்சட்ட திருத்த சட்டமூலம்

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டு வரவு -செலவு திட்டத்தின் மூலம் மதுசாரம், சிகரட், தொலைத்தொடர்புகள், பந்தயம், சூதாட்டம், வாகனங்கள் மீதான வரி அறவீட்டு செயற்றிறனை விருத்தி செய்வதற்கு இயலுமான வகையில் பலதரப்பட்ட நியதிச்சட்டங்களின் கீழ் விதிக்கப்பட்டுள்ள வரிகள் மற்றும் அறவீடு செய்யும் ஒரு சில வரிகளுக்கு பதிலாக இணையவழியூடாக முகாமைத்துவப்படுத்தும் தனியானதொரு விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியை விதிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

பெறுமதிசேர் வரியை அதிகரிப்பதற்கும் மற்றும் பெருந்தொற்று அல்லது பொதுச் சுகாதார நிலைமையின் கீழ் அரச மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும் மருத்துவ உபகரணங்கள், கருவிகள் மற்றும் இரசாயனத் திரவியங்கள் போன்றவற்றுக்கான பெறுமதிசேர் வரியை நீக்குவதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கு அங்கிகாரமளிக்கப்பட்டுள்ளது.

## சுற்றறிக்கையை திருத்தம் செய்தல்

அதிபர் - ஆசிரியர் சேவைகளின் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்காக 2018 ஆம் ஆண்டு கல்வி அமைச்சால் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடி அப்போதிருந்த சம்பள நிர்ணய சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொள்வதற்கு அமைச்சரவை அங்கிகாரம் கிடைத்துள்ளது. குறித்த யோசனையை நடைமுறைப்படுத்துவதற்காக 2022 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் மூலம் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டில் குறித்த சம்பள முன்மொழிவுகளைத் தயாரிக்கும் போது ஆசிரிய ஆலோசகர் சேவை நிறுவப்படாமையால், குறித்த சேவைக்கான சம்பளத்திட்டத்தை உள்ளடக்கி அதிபர் - ஆசிரியர் சேவைகளின் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கு இயலுமான 03/2016 வகையில் பொது நிர்வாக சுற்றறிக்கை திருத்தம் செய்வதற்கு கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## ஊக்குவிக்கும் வேலைத்திட்டம்

2030 ஆம் ஆண்டளவில் மின்சக்தித் தேவையின் 70 சதவீதத்தை மீள்பிறப்பாக்க எரிசக்தி மூலங்களிலிருந்து உற்பத்தி செய்வதற்காகவும் 2050 ஆம் ஆண்டளவில் எரிசக்தி உற்பத்திகளிலிருந்து வெளியேறும் கரியமில காபன் வெளியீடுகளை இல்லாது செய்வதற்கும், தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொண்டுள்ளது.

தற்போது நாட்டின் மின்சாரக் கட்டமைப்புக்கு கூரையில் பொருத்தப்பட்ட சூரியமின் தொகுதிகள் மூலம் 400 மெகாவோட் இயலளவு கொண்ட மின் விநியோகிக்கப்படுகின்றது. இத்தொகுதிக்காக புதிய கட்டண முறை மூலம் தன்னார்வ நிதி முதலீடுகளின் பிரகாரம் மின்கலத்தொகுதியைப் பொருத்துவதற்கு ஊக்கமளிப்பதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு மிகவும் நம்பகரமான மின்சார விநியோகத்தை உருவாக்குவதற்கு இயலுமை கிட்டும்.

இந்நிலைமையின் கீழ் மீள்பிறப்பாக்க எரிசக்தி மூலங்களிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தை அதிகளவில் தேசிய மின்கட்டமைப்புக்கு இணைக்கும் போது மேலெழக்கூடிய தொழில்நுட்ப ரீதியான சவால்களை அடையாளங்கண்டு, பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த அதிகாரிகள் குழு அறிக்கையின் பரிந்துரைகள் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கமைய முன்மொழியப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

புதுடெல்லி

# இந்தியாவில் கொரோனா மூன்றாவது அலை

## கொரோனா பணிக்குழு தலைவர்



இந்தியாவில் கொரோனா பாதிப்பு வேகமாக அதிகரித்து வருகிறது. இந்த நிலையில், இந்தியாவில் கொரோனா மூன்றாவது அலை ஏற்பட்டுள்ளதாகவும், ஒமிக்ரானால் இந்த அலை ஏற்பட்டுள்ளதாகவும் மத்திய அரசின் கொரோனா பணிக்குழு தலைவர் டொக்டர் என். கே. அரோரா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர், “நாடு முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையில், ஒமிக்ரானால் பாதிக்கப்பட்டவர்களின் சதவீதம் வேகமாக அதிகரித்து வருகிறது. பெரிய நகரங்களான புதுடெல்லி, மும்பை, சென்னை, கொல்கத்தாவில் கொரோனா பாதிக்கப்பட்டவர்களில் 75 சதவீதம் பேர் ஒமிக்ரானால் பாதிக்கப்பட்டுள்ளனர். கொரோனாவின் மூன்றாவது அலையில் இந்தியா உள்ளது. முழு அலையும் ஒமிக்ரானால் ஊசப்படுவதுபோல் உள்ளது” எனத் தெரிவித்துள்ளார்.

திருமலை

# சேவலுக்கு கேக் வெட்டி பிறந்தநாள்



தெலங்கானா மாநில தலைநகர் ஐதராபாத்தை சேர்ந்த ஒரு குடும்பம், தங்கள் வீட்டு உறுப்பினராக சேவலை வளர்த்து வருகின்றனர். இந்தச் சேவலுக்கு ‘சின்னு’ என்றும் பெயரிட்டுள்ளனர். இந்தச் சேவலுக்கு இரண்டாம் ஆண்டு பிறந்த நாள் விழா கொண்டாட்டம் சில தினங்களுக்கு முன்பு நடந்தது.

அப்போது, உறவினர்கள், நண்பர்களை வீட்டுக்கு அழைத்து, அவர்கள் முன்னிலையில் சேவலுக்கு கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடினர். இதற்காக அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன. பிளாஸ்டிக் கத்தியை சேவலின் கால்களில் பிடிக்க வைத்து, கேக்கை வெட்டினர். பின்னர், அந்த கேக்கை சேவலுக்கு ஊட்டி மகிழ்ந்தனர். இதைத்தொடர்ந்து, உறவினர்களுக்கு இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

புதுடெல்லி

# காந்தியை சுட்ட கோட்சேவுக்கு ஆதரவு முழக்கம்



மகாத்மா காந்தியை சுட்ட நாதுராம் கோட்சேவுக்கு ஆதரவாக, மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் முழக்கம் எழுந்துள்ளது. கோட்சேவுக்கு சில இந்துத்துவா அமைப்பினர் அளிக்கும் ஆதரவு தொடர்வதாகத் தெரிகிறது. கோட்சேவுக்கு ஆதரவு தெரிவித்து கருத்து தெரிவித்து வருபவர்கள் மீது, தேசவிரோத வழக்குகள் பதிவான பிறகும் அடுத்தடுத்து சிலர் அதே கருத்தை வலியுறுத்தி வருகின்றனர்.


கடைசியாக டிசெம்பரில் காங்கிரஸ் ஆளும் சத்தீஸ்கர் தலைநகர் ராய்ப்பூரில் நடைபெற்ற சாதுகள் சபை மாநாட்டில், கோட்சேவுக்கு ஆதரவாக சாது காளிச்சரண் பேசினார். இது தொடர்பான வீடியோ, சமூக வலைதளங்களில் வைரலானதைத் தொடர்ந்து, காளிச்சரண் மீது தேச விரோத வழக்கு பதிவு செய்யப்பட்டு, அவர் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில், காளிச் சரணை விடுவிக்க வலியுறுத்தி, மத்திய பிரதேச மாநிலத்தின் இந்தூரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏராளமானோர் திரண்டனர். அப்போது, “நாதுராம் கோட்சே ஜிந்தாபாத்” என ஆதரவு முழக்கங்கள் எழுப்பப்பட்டன. இதைக்கேட்டு, பொலிஸாரும் அமைதி காத்தனரே தவிர, அதற்காக எவர் மீதும் வழக்குப் பதிவு செய்யவில்லை.

இப்போராட்டத்தில் சத்தீஸ்கரின் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர் பூபேந்தர் பகேலுக்கு எதிராகவும் கோஷங்கள் எழுப்பப்பட்டன. “முதல்வர் பகேலுக்கு எங்கள் கடவுளான ஹனுமன் நல்லறிவை வழங்க வேண்டும்” எனக்கூறி, அதற்கான மந்திரங்களும் ஓதப்பட்டன.

சென்னை

# மாஸ்க் வழங்கிய முதலமைச்சர்



சென்னை, அண்ணாசாலையில் மாஸ்க் போடாமல் சென்று கொண்டிருந்த பொதுமக்களுக்கு முகக்கவசங்கள் வழங்கி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

தமிழ்நாட்டில், ஒமிக்ரான் காரணமாக கொரோனா மூன்றாம் அலை ஏற்பட்டுவிட்டதாக சுகாதாரத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்து இருந்தார். இந்த நிலையில், பொதுமக்கள் மாஸ்க் அணிவதைக் கண்காணிக்க, சென்னையில் தன்னார்வலர்கள் ஆயிரக்கணக்கில் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். வார்டுக்கு 100 பேர் வீதம் ஒவ்வொரு வார்டுக்கும் ஆட்கள் களமிறக்கப்பட்டு, மாஸ்க் அணியாத நபர்கள் கண்காணிக்கப்பட்டு வருகிறார்கள். மாஸ்க் மட்டுமே கொரோனா பரவலை தடுக்கும். ஒமிக்ரான் தீவிரத்தை மாஸ்க் மட்டுமே குறைக்கும் என்று அரசு சார்பாக தீவிரமாக பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில்தான், நேற்று (04) சென்னையில் முகக்கவசம் அணியாத மக்களுக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முகக்கவசங்களை வழங்கினார்.

அண்ணாசாலையில் காரில் சென்று கொண்டிருந்தபோது, முதலமைச்சர் ஸ்டாலின் சாலையில் இறங்கி மாஸ்க் வழங்கினார். கையில் மாஸ்க் பெட்டியை வைத்துக்கொண்டு எல்லோருக்கும் மாஸ்க் வழங்கினார்.

மாஸ்க் அணியாமல் வந்தவர்களுக்கு அருகில் சென்று, “இப்படி வெளியே வரக் கூடாது; இது பாதுகாப்பு இல்லை. கொரோனா விதிகளை கடைப்பிடியுங்கள்” என்று கூறினார். அதோடு தனது கையால் அவர்களுக்கு மாஸ்க் அணிவித்தார். முதலமைச்சின் இந்தச் செயல் அங்கிருந்த மக்கள் இடையே வியப்பை ஏற்படுத்தியது.

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்டில்

# வெற்றியை நோக்கி பங்களாதேஷ்

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்டில் வெற்றியை நோக்கி பங்களாதேஷ் பயணிக்கிறது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின், மெளன்ட் மகட்டரேயில் கடந்த சனிக்கிழமை ஆரம்பித்த இப்போட்டியின் நேற்றைய நான்காம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 6 விக்கெட்டுகளை இழந்து 401 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த பங்களாதேஷ், ஓட்டங்களைச் சேகரித்த மெஹிடி ஹஸன் மிராஸை 47 ஓட்டங்களுடன் டிம் செளதியிடம் இழந்தது.

சிறிது நேரத்தில் 26 ஓட்டங்களுடன் யாசிர் அலியை கைல் ஜேமிஸனிடம் இழந்த பங்களாதேஷ், எஞ்சிய இரண்டு விக்கெட்டுகளையும் அடுத்தடுத்து செளதி, ட்ரெண்ட் போல்டிடம் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 458 ஓட்டங்களைப் பெற்றது.

இந்நிலையில், தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, குறிப்பிட்ட நேரத்திலேயே பதில் அணித்தலைவர் டொம் லேதமை இழந்ததுடன், டெவோன் கொன்வேயை எபொடொட் ஹொஸைனிடம் இழந்து தடுமாறியது.

பின்னர் வில் யங்கும், றொஸ் டெய்லரும் இனிங்ஸைக் கட்டியெழுப்பிய நிலையில் 69 ஓட்டங்களுடன் ஹொஸைனிடம் யங் வீழ்ந்ததோடு அடுத்து வந்த ஹென்றி நிக்கொல்ஸ், டொம் பிளண்டல் ஆகியோரும் ஹொஸைனிடம் விழ நேற்றைய நான்காம் நாள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்ற வண்ணம் தமது இரண்டாவது இனிங்ஸில் நியூசிலாந்து காணப்படுகின்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

நியூசிலாந்து: 328/10 (துடுப்பாட்டம்: டெவோன் கொன்வே 122, ஹென்றி நிக்கொல்ஸ் 75, வில் யங் 52, றொஸ் டெய்லர் 31 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷொரிஃபுல் இஸ்லாம் 3/69, மெஹிடி ஹஸன் மிராஸ் 3/86, மொமினுல் ஹக் 2/6, எபொடொட் ஹொஸைன் 1/75)

பங்களாதேஷ்: 458/10 (துடுப்பாட்டம்: மொமினுல் ஹக் 88, லிட்டன் தாஸ் 86, மஹ்முடுல் ஹஸன் றோய் 78, நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 64, மெஹிடி ஹஸன் மிராஸ் 47, யாசிர் அலி 26 ஓட்டங்கள். பந்துவீச்சு: ட்ரெண்ட் போல்ட் 4/85, நீல் வக்னர் 3/101, டிம் செளதி 2/114, கைல் ஜேமிஸன் 1/78)

நியூசிலாந்து: 147/5 (துடுப்பாட்டம்: வில் யங் 69, றொஸ் டெய்லர் ஆ.இ 37 ஓட்டங்கள். பந்துவீச்சு: எபொடொட் ஹொஸைன் 4/39, தஸ்கின் அஹ்மட் 1/22)



# கல்முனை வின்னர்ஸ் பூப்பந்தாட்டத் தொடர்




நூருல் ஹுதா உமர்

கல்முனை வின்னர்ஸ் பூப்பந்தாட்ட மைதானம் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பு நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற பூப்பந்தாட்டத் தொடரானது, கல்முனை வின்னர்ஸின் தலைவரும், பயிற்றுவிப்பாளருமான ஆசிரியர் யூ.எல்.எம். ஹிலாலின் தலைமையில் வின்னர்ஸ் பூப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெற்றது.

15 வயதுக்குட்பட்டோர், 17 வயதுக்குட்பட்டோர், 17 வயதுக்கு மேற்பட்டோர் என மூன்று வயதுப் பிரிவு ஜோடிக்குழுவினருக்கு இடையில் நடைபெற்ற இத்தொடரில் 15 வயதுக்குட்பட்டோர் வகுப்பில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 18 ஜோடிகள் மோதியதில் மூன்றாமிடத்தை ஆதில்- றபீஸ் ஜோடியும், இரண்டாமிடத்தை ஷராஃப் - அன்சாப் ஜோடியும் பெற்றுக் கொண்டதுடன் அந்த வகுப்பு பிரிவின் சம்பியன் பட்டத்தை அஹனாப் - மிஜ்வத் ஜோடி தட்டிச் சென்றது.

17 வயதுக்குட்பட்டோர் வகுப்பில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 12 ஜோடிகள் மோதியதில் இரண்டாமிடத்தை டீ. யுகேசன் - கே. விபிஷன் ஜோடி பெற்றுக் கொண்டதுடன், அந்த வகுப்பு பிரிவின் சம்பியன் பட்டத்தை ஸஹ்ஸத் - அப்தி ஜோடி தட்டிச் சென்றது.

மேலும் 17 வயதுக்கு மேற்பட்டோர் வகுப்பில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 11 ஜோடிகள் மோதியதில் இரண்டாமிடத்தை இம்ஸான் - சஸ்பி ஜோடி பெற்றுக் கொண்டதுடன், அந்த வகுப்பு பிரிவின் சம்பியன் பட்டத்தை ஆதில் - நிப்ராஸ் ஜோடி தட்டிச்சென்றது.

இத்தொடரில், விளையாட்டுத்துறை முன்னாள் பிரதியமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். மேலும் அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவரும், அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினருமான எஸ்.எம். சபீஸ் கௌரவ அதிதியாக கலந்துகொண்டதுடன், கல்முனை மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி ரோஷன் அக்தர், கல்முனை முன்னாள் பிரதேச செயலாளர் ஏ. எம். நஸீர், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.பி.எம். இர்ஷாத், சாஹிரா தேசிய கல்லூரி அதிபர், அல்- பஹ்ரியா தேசிய பாடசாலை, அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலய அதிபர், அல்- அஸ்ஹர் வித்தியாலய அதிபர் உட்பட சாய்ந்தமருது கிரிக்கட் சங்க பிரதிநிதிகள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், வீரர்கள் எனப் பலரும் கலந்து கொண்டதுடன் அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவரும், அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினருமான எஸ்.எம். சபீஸால் வின்னர்ஸ் பூப்பந்தாட்ட மைதானம் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பு நிலையத்தின் மேம்பாட்டுக்கான நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது.

தென்னாபிரிக்காவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# 202 ஓட்டங்களுடன் சுருண்ட இந்தியா



தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டின் தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 202 ஓட்டங்களையே பெற்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், ஜொஹன்னஸ்பேர்க்கில் நேற்று முன்தினம் ஆரம்பித்த இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இந்தியாவின் பதில் அணித்தலைவர் லோகேஷ் ராகுல் தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

காயம் காரணமாக இந்திய அணியின் டெஸ்ட் போட்டிகளுக்கான அணித்தலைவர் விராட் கோலி இப்போட்டியில் பங்கேற்காத நிலையில் அவரை ஹனும விஹாரி பிரதியிட்டிருந்தார். தென்னாபிரிக்கா சார்பாக குயின்டன் டி கொக், வியான் முல்டரை கைல் வெரைன், டுவன்னே ஒலிவியர் ஆகியோர் பிரதியிட்டிருந்தனர்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, மாயங்க் அகர்வால், ராகுல் மூலம் நிதானமான ஆரம்பத்தைப் பெற்றது. எனினும், மார்கோ ஜன்சனிடம் 26 ஓட்டங்களுடன் அகர்வாலை இழந்ததைத் தொடர்ந்து செட்டேஸ்வர் புஜாரா, அஜின்கியா ரஹானேயை அடுத்தடுத்து ஒலிவியரிடம் இழந்தது.

பின்னர் ராகுலும், விஹாரியும் இனிங்ஸைக் கட்டியெழுப்பிய நிலையில் 20 ஓட்டங்களுடன் ககிஸோ றபாடாவிடம் விஹாரி வீழ்ந்ததோடு, 50 ஓட்டங்களுடன் ஜன்சனிடம் ராகுல் வீழ்ந்தார். றிஷப் பண்டும், இரவிச்சந்திரன் அஷ்வினும் ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் 17 ஓட்டங்களுடன் ஜன்சனிடம் பண்ட் வீழ்ந்ததுடன், உடனேயே ஷர்துல் தாக்கூரும் ஒலிவியரிடம் வீழ்ந்திருந்தார்.

மொஹமட் ஷமி, றபாடாவிடம் விழ, 46 ஓட்டங்களுடன் அஷ்வினும் ஜன்சனிடம் வீழ்ந்திருந்தார். இறுதியாக றபாடாவிடம் சிராஜ் விழ, சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 202 ஓட்டங்களை இந்தியா பெற்றிருந்த நிலையில், ஜஸ்பிரிட் பும்ரா ஆட்டமிழக்காமல் 14 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

பதிலுக்கு, தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் தென்னாபிரிக்கா ஆரம்பத்திலேயே மொஹமட் ஷமியிடம் ஏய்டன் மார்க்ரமை இழந்தபோதும், நேற்று முன்தின முதல் நாள் முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 35 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில், அணித்தலைவர் டீன் எல்கர் 11, கீகன் பீற்றர்சன் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளனர்.

அவுஸ்திரேலியா

மூளையின் சிக்னலால்

# ட்வீட் செய்த முதல் நபர்

உலகிலேயே முதன்முறையான மூளையின் சமிக்ஞைகளைப் பயன்படுத்தி ட்வீட் செய்த நபர் என்கிற பெருமையை அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பிலிப் ஓ கீப் பெற்றுள்ளார்.

62 வயதான இவர் கடந்த 2015 ஆம் ஆண்டு அமியோட்ரோபிக் லேட்டரல் ஸ்கிலெரோசிஸ் (Amyotrophic lateral sclerosis) என்கிற நோயால் பாதிக்கப்பட்டார்.

இதனால் இவரின் உடல் முழுமையாக செயலிழந்துவிட்டது.

இதனையடுத்து அவர் தொடர்பாடலை மேற்கொள்வதற்காக அவரது மூளையில் பொருத்தக் கூடிய வகையில் மைக்ரோ சிப்பொன்றினை கலிபோர்னியாவை சேர்ந்த சிங்க்ரோன் என்கிற




கணினி தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இவ் மைக்ரோ சிப் மூலம் சிறிய அளவிலான எண்ண அலைகளை மாத்திரமே தற்போது எழுத்துருவாக்கம் செய்ய முடியும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்தவகையில் பிலிப் முதலில் 'hello world' என்கிற வார்த்தையை எண்ணங்களின் மூலம் எழுத்துருவாக்கம் செய்துள்ளதாகவும் இதன் மூலம், உலகிலேயே முதன்முதலில் எண்ணங்களால் ட்வீட் செய்த மனிதர் என்கிற பெருமையை பிலிப் பெற்றுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் இதற்கு முன்னரும் இது போன்ற பல நவீன தொழில்நுட்பங்களை கையாண்டு உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நேபாளம்

# இளைஞர்கள் மத்தியில் களைகட்டும் 'ஒட்டாக்கு ஜட்ரா'

நேபாளத்தில் 'ஒட்டாக்கு ஜட்ரா' (Otaku Jatra) என்று அழைக்கப்படும் வருடாந்திர விழாவானது கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் பிரபலமடைந்து வருகிறது.

ஆண்டுதோறும் புத்தாண்டு முதல் வாரத்தில் நடைபெறக்கூடிய இவ்விழாவில் அந்நாட்டு இளைஞர்கள் பிரபலமாக உள்ள காட்டூன் கதாபாத்திரங்கள் போன்று வேடமணிந்து கலந்து



கொள்வது வழமை.

அந்தவகையில் இந்த வருடமும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் திரைப்படங்கள், தொலைக்காட்சி தொடர்கள், வீடியோ கேம்ஸ் ஆகியவற்றில் பிரபலமாக உள்ள



கதாபாத்திரங்களை போன்று ஆடை, அணிகலன்களை அணிந்து விழாவில் பங்கேற்றிருந்தனர்.

இது குறித்து வெளியான புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது

மொராக்கோ

பெண்களின் மதிப்பெண்களை

# தீர்மானித்த உடலுறவு

தன்னிடம் கல்வி கற்கும் மாணவிகளிடம் 'என்னுடன் உடலுறவுக்கு ஒத்துழைத்தால் அதிக மதிப்பெண் வழங்குவேன்' என கல்லூரி ஆசிரியர் தெரிவித்த சம்பவம் மொராக்கோவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மொராக்கோவின் யஜ்டா நகரில் உள்ள ஒரு கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியரே இவ்வாறு கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த ஆசிரியர் மாணவிகளிடம் "நீங்கள் பரீட்சையில் நல்ல மதிப்பெண்களைப் பெறவேண்டுமென்றால் என்னுடன் செக்ஸ்



உறவு வைத்துக்கொள்ள வேண்டும்" என்று வற்புறுத்தி வந்துள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் இவ்விடயம் குறித்து பாதிக்கப்பட்ட மாணவிகள் பொலிஸ் நிலையத்தில் புகார் அளிக்கவே இவ்விடயம் அம்பலத்திற்கு வந்துள்ளது.

இதையடுத்து குறித்த ஆசிரியர் உடனடியாக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் மீதான விசாரணைகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மொராக்கோ சில ஆண்டுகளாக பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டுகள் பல்கலைக்கழகங்களில் இடம்பெற்று வருவதாகக் கூறப்பட்டு வந்த போதும் அது தொடர்பாக பெரிய அளவில் விசாரணை நடைபெறாமல் இருந்து வந்தது.

இந்நிலையில் குறித்த சம்பவம் வெளியானதையடுத்து அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா

# வேறு வேறு ஆண்டில்...

அமெரிக்காவில் பெண்ணொருவருக்கு வேறு வேறு ஆண்டில் இரட்டைக் குழந்தைகள் பிறந்துள்ளனர்.

அமெரிக்காவின் கலிஃபோர்னியா மாகாணத்தைச் சேர்ந்த பாத்திமா மேட்ரிக்கல் - ராபர்ட் ட்ருஜில்லோ தம்பதிக்கே இவ்வாறு இரட்டைக் குழந்தைகள் பிறந்துள்ளன.

இவர்களுக்கு ஏற்கெனவே 2 மகள்களும் ஒரு மகனும் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மீண்டும் கர்ப்பம் தரித்த பாத்திமாவுக்கு கடந்த 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி பிரசவ வலி ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு அன்றிரவு 11.45 மணியளவில் ஆண் குழந்தையொன்றும், மறுநாள் காலை 12 மணியளவில் பெண்குழந்தையொன்றும் பிறந்துள்ளது.

இது குறித்து கருத்துத் வைத்தியர்கள் "சுமார் 20 இலட்சத்திற்கு ஒரு குழந்தை இப்படியாக பிறக்க வாய்ப்பு உள்ளது" எனத்



தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த தம்பதியினர் அக்குழந்தைகளுக்கு அல்ஃப்ரீடோ, அய்லின் என பெயரிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 05 ஜனவரி 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.